ஸம்புடம் —] ... 1 ... [ஸஞ்சிகை 7

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# 'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)

...ரியர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(...ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
...ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
...ரசுரம் செய்யப்படுகிறது.

1936- ... [ ...

JL
Q2ᵐ211, N35SS
N36 . 2 . 7
189896

## விஷயம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | தயாசதகம் | [தொடர்ச்சி] | 81—88 |
| 2. | ப்ரமாபநோதிநீ | [தொடர்ச்சி] | 9—16 |
| 3. | அத்யமே ச்லோகார்த்தவிஷயவ்யாஸங்களின் ஸங்க்ரஹ விமர்சம் | | 1—14 |
| 4. | பதிலுரைகள் | [தொடர்ச்சி] | 37—44 |
| 5. | கோதாஸ்துதி | [தொடர்ச்சி] | 9—14 |




"க்ருபையே! உன்னுடைய விளையாட்டுகளாலே ஸ்வாதந்த்ரியத்தை முற்றுமிழந்த ஸ்ரீநிவாஸன் ஸமுத்ரராஜனுக்கு ஹிதமென்று நினைத்து அவன் சத்ருக்களைத் தொலைத்தான். ராமன் பெருமையை ஸஹிக்கமாட்டாமல் கோடாலியை யேந்தி வந்த பரசுராமனுடைய புண்யமென்னும், விலங்கைத்தொலைத்தான். காகாஸுரனுடைய ஒரு கண்ணை மட்டும் தொலைப்பது அவனுக்கு ஹிதமென்று அவனுடைய ஒரு கண்ணை நீக்கினான். இப்படித் தண்டன மார்க்கத்தைக்கூட அபராதிகளான சத்ருக்களுக்கு நல்ல கதியை உண்டுபண்ணுவதாக உன்னுடைய வசமாயிருப்பதால் அவன் செய்கிறான்."

(தா—ம்) முன் ச்லோகத்தில் குற்றம் செய்தவர்களுடைய குற்றங்களைத் தயையின் ப்ரபாவத்தால் ஸ்ரீநிவாஸன் பாராட்டுவதில்லை என்றார். இங்கே குற்றங்களுக்காக ஹிதத்தையே விளைவிக்கிறானென்றும், குற்றங்களுக்கு விதிக்கும் தண்டனையின் க்ரமம்கூட குற்றம் செய்தவருக்கு அனுகூலமாக முடிகிறதென்றும், தயையின் ப்ரபாவத்தைக் காட்டுகிறார். முதலில் பெருமாள் வந்தபோது அவரைத் திரஸ்கரித்து மேலும் மேலும் பொங்கி அலைமோதிய ஸமுத்ரராஜனுடைய த்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிறார். ஸமுத்திரத்தைப் புண்யதீர்த்தங்களுக்கெல்லாம் கணவனென்று பொருள்படும் 'அபாம்பதி:' என்கிற பெயரினால் குறிப்பிடுவது மிகவும் அழகு. ஸமுத்ரத்தையே வற்றச்செய்து தரையாக்குகிறேன்; ஜலத்தையே என்னுடைய பாணத்தின் அக்நியினால் எண்ணெயைப்போல் எரியச்செய்து சோஷணம் செய்கிறேன். வானரர்கள் காலாலே நடந்து லங்கைக்குப் போகட்டும்" என்று ப்ரபு அதிகோபத்தோடு சீறியபோது, ஸமுத்ரராஜன் நடுங்கி கங்கை யமுனை முதலிய தன்னுடைய பத்நிகளான ஸகல புண்ய நதிகளையும் தன்னைச் சூழ்ந்துவரும்படி செய்து அத்தனை ஸ்திரீகளின் நடுவிலேதானிருந்துகொண்டு ப்ரபுவின் ஸமீபத்திற்கு வந்ததாக ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ப்ரபுவின் கோபத்தை மாற்றுவதற்காக அவன் அப்படிச்செய்தான். அவனை ஹிம்ஸித்தால் உலகத்துக்கெல்லாம் பாபத்தைப் போக்கும் எல்லா புண்யநதிகளுக்கும் வைதவ்யம் வருமே என்று ஸ்வாமி அஞ்சமாட்டாரா என்பது கருத்து. இந்த அபிப்ராயத்தை இங்கே கவி வ்யஞ்ஜனம் செய்கிறார்.

89896

ஸமுத்ரராஜன்மேல் வந்த அத்யுக்ரமான கோபத்தை தயவினால் ஒரு க்ஷணத்தில் மாற்றி அவனுடைய சத்ருக்களின்மேல் அந்தக் கோபத்தைத் திருப்பி அவர்களைத் தொலைப்பதனால் ஸமுத்ரராஜனுக்கு அநுகூலமே ஏற்பட்டது. அப்படியே, அப்பொழுதுதான் தநுர்பங்கம் செய்து சீதையைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டு மிக்க வ்ருத்தரான தகப்பனரோடு மிதிலையிலிருந்து அயோத்யைக்குச் செல்லுகையில், ராமனுடைய யசஸ்ஸைக் கேட்கப்பொருமல் கையும் கோடாலியுமாய் எதிர்கொண்டு எதிர்த்துவந்த ஸர்வ க்ஷத்ரிய ஹந்தாவான பரசுராமரென்னும் ப்ராஹ்மணரை ஜயித்து அவர்மீது தொடுத்த தன் பாணத்தினின்று அவரை விட்டுவிட்டு அவருடைய புண்யங்களை எய்து அவற்றை அழித்தார். மோக்ஷத்தை அடைய வேண்டியவனுக்கு புண்யங்களும் விலங்கென்பர். காராக்ருஹமாகிய ஸம்ஸாரத்தில் சிறைப்பட்டவருக்கு ஸம்ஸாரஸாதகங்களைக் கொடுக்கும் புண்யமும் பொன்விலங்காகும். பொன்விலங்காயினும் விலங்குதானே. புண்யத்தை நாசம் செய்தது அவருக்கு அநுகூலமாயிற்று. லோகமாதாவான ஸீதாபிராட்டியின் ஸ்தனங்களை நோக்கின காகாஸுரனுடைய கண்களில் ஒன்றை மட்டும் வாங்குவது அவனுக்கு ஹிதமென்று அதைமட்டும் வாங்கினர். ஒற்றைக்கண்ணினல் பார்க்கக்கூடாத விஷயங்களை நன்ருய் பார்ப்பது கஷ்டமானபடியால் பார்வையினல் தோஷத்தை ஸம்பாதிப்பதற்கு இடங்குறையுமாதலால் ஒரு கண் போனதும் அவனுக்கு ஹிதமாயிற்று. உலக ரீதியை இப்படி மாற்றுவது தயாதேவியின் விளையாட்டு. தண்டன கதியை துர்கதியென்பர். அதையும் தயாதேவி ஸுகதியாகச் செய்கிருளென்று ஆச்சர்யம். (64)

𑌨𑌿𑌷𑌾𑌦𑌾𑌨𑌾𑌂 𑌨𑍇𑌤𑌾 𑌕𑌪𑌿𑌕𑍁𑌲𑌪𑌤𑌿𑌃 𑌕𑌾𑌪𑌿 𑌶𑌬𑌰𑍀
𑌕𑍁𑌚𑍇𑌲𑌃 𑌕𑍁𑌬𑍍𑌜𑌾 𑌵𑌾 𑌵𑍍𑌰𑌜𑌯𑍁𑌵𑌤𑌯𑍋 𑌮𑌾𑌲𑍍𑌯𑌕𑍃𑌦𑌿𑌤𑌿 ।
𑌅𑌮𑍀𑌷𑌾𑌂 𑌨𑌿𑌮𑍍𑌨𑌤𑍍𑌵𑌂 𑌵𑍃𑌷𑌶𑌿𑌖𑌰𑌿𑌪𑌤𑍇𑌰𑍁𑌨𑍍𑌨𑌤𑌿𑌮𑌪𑌿
𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑍈𑌃 𑌸𑍍𑌰𑍋𑌤𑍋𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇 𑌸𑌮𑌯𑌸𑌿 ॥

நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ
குசேல: குப்ஜா வா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி ।
அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதேருந்நதிமபி
ப்ரபூதை: ஸ்ரோதிபி: ப்ரஸபமநுகம்பே ஸமயஸி ॥ (65)



(ப-ரை) அநுகம்பே - தயையே! நிஷாதாநாம் நேதா - வேடர்களுக்குத் தலைவன் (குஹன்), கபிகுலபதி: - குரங்குஜாதிக்கரசன் (ஸுக்ரீவர்), காபி சபரீ - யாரோ ஒரு காட்டுமனுஷியான சபரி, குசேல: - கந்தைத்துணிக் குசேலர், குப்ஜா வா - (கம்ஸன் சேடியான) அந்தக்கூனி, வ்ரஜயுவதய: - இடப்பெண்கள், மால்யக்ருத் - மாலாகாரர், இதி - ஆகிய இப்படிக்கொத்த, அமீஷாம் - இவர்களுடைய, நிம்நத்வம் - தாழ்மையையும், வ்ருஷகிரிபதே: - வேங்கடமலை அரசனுடைய, உந்நதிமபி - உயர்த்தியையும், ப்ரபூதை: - (கரைபுரண்டுவரும்) ப்ரவஹிக்கும், ஸ்ரோதோபி: - ஜலங்களால், ப்ரஸபம் - பலாத்காரமாக, ஸமயஸி - ஸமானமாகச் செய்கிருய் (ஒரு ஸமனக்குகிருய்).

தயையே! வேடர்களுக்கு நாயகனை குஹன், வானரகுலத்துக்கு அதிபனை ஸுக்ரீவன், யாரோ ஒரு வேடப்பெண், குசேலர், அந்தக்கூனி, இடப்பெண்கள், மாலாகாரர் என்கிற இவர்களுடைய தாழ்வையும் வேங்கடமலையரசனுடைய மேன்மையையும் உன்னுடைய அபரிமிதமான ப்ரவாஹங்களாலே நிரப்பி பலாத்காரமாய் ஸமனக்குகிருய்.

(தா—ம்) முன் ச்லோகத்தில் அபராதம் செய்தவர்களுக்கு விதிக்கும் தண்டனையும் அநுகூலமாக முடிகிறதென்று காட்டினர். இங்கே அதிநீசமான குஹன் முதலியவர்களோடும் அத்யுச்சரான மலைப்பெருமாள் தயாதேவியின் ப்ரபாவத்தால் ஸமமாகக் கலந்து பரிமாறுவதைக்காட்டுகிருர். உயரத்திலிருப்பவரையும், தாழ்ந்த இடத்திலிருப்பவரையும் ஸமப்படுத்துவதற்காக தயாதேவி தன்னுடைய ப்ரவாஹங்களை வெள்ளமிடச் செய்து இருவரையும் சமமாகச் சேர்த்துவிடுகிருள். வெள்ளம் மேலிருப்பவனையும் கீழே கொண்டுவரும்; கீழிருப்பவனையும் மேலே கொண்டுவரும். இப்படி இரண்டு விதத்தாலும் இருவரையும் ஸமநிலையாக்கலாம். இங்கே கூனியென்பது கம்ஸனுக்கு சந்தனச்சாந்து அரைத்துக்கொண்டுபோகும் மூன்று கோணலையுடைய த்ரிவக்ரையான குப்ஜையைச் சொல்லுகிறது. அவள் விஷயத்தில் அவள் உடம்பு கோணல்களையெல்லாம் ஸமப்படுத்தினதையும் கொள்ளவேணும். (65)

த்வயா த்ருஷ்டஸ்துஷ்டிம் பஜதி பரமேஷ்டீ நிஜபதே
வஹந்மூர்த்தீரஷ்டௌ விஹரதி ம்ருடாநீபரிப்ருட: ।
பிபர்த்தி ஸ்வாராஜ்யம் வ்ருஷசிகரிச்ருங்காரிகருணே
சுநாஸீரோ தேவாஸுரஸமரநாஸீரஸுபட: ॥

த்வயா த்ருஷ்டஸ்துஷ்டிம் பஜதி பரமேஷ்டீ நிஜபதே
வஹந்மூர்த்தீரஷ்டௌ விஹரதி ம்ருடாநீபரிப்ருட: ।
பிபர்த்தி ஸ்வாராஜ்யம் வ்ருஷசிகரிச்ருங்காரிகருணே
சுநாஸீரோ தேவாஸுரஸமரநாஸீரஸுபட: ॥ (66)

(ப-ரை) வ்ருஷசிகரிச்ருங்காரிகருணே - வேங்கடமலையின் அழகான பெருமாள் தயையே! பரமேஷ்டீ - உயர்ந்த பதத்திலுள்ள ப்ரஹ்மாவானவர், த்வயா - உன்னாலே, த்ருஷ்ட: - கடாக்ஷிக்கப்பட்டு, நிஜபதே - தன் ஸ்தானத்தில், துஷ்டிம் - ஆநந்தத்தை, பஜதி - எப்பொழுதும் அடைந்துகொண்டிருக்கிறார், ம்ருடாநீபரிப்ருட: - பார்வதீபதியானவர், அஷ்டௌ - எட்டு, மூர்த்தீ: - சரீரங்களை (ஐந்து பூதங்கள், ஸூர்யன், சந்திரன், யாகம் செய்யும் எஜமானன் ஆக எட்டு), வஹந் - தாங்கிக்கொண்டு, விஹரதி - விளையாடுகிறார், சுநாஸீர:-இந்திரன், தேவாஸுரஸமரநாஸீரஸுபட: - தேவாஸுரர்கள் யுத்தத்தில் சேனை முனையில் சிறந்த போர் வீரனாக இருந்துகொண்டு, ஸ்வாராஜ்யம் - ஸ்வர்க்கத்தரசை, பிபர்த்தி - பரிபாலிக்கிறான்.

வ்ருஷகிரிக்கு அலங்காரமான ஸ்ரீநிவாஸனுடைய கருணையே! உன்னால் கடாக்ஷிக்கப்பட்டு ப்ரஹ்மாவானவர் தன்னுடைய ஸ்தானத்தில் ஸந்தோஷத்தை அடைகிறார். (உன்னாலே கடாக்ஷிக்கப்பட்டு) பார்வதீபதியானவர் எட்டு மூர்த்திகளைத் தரித்துக்கொண்டு ஸுகமாக விளையாடுகிறார். இந்த்ரனும் தேவாசுரர்கள் ஒருவரையொருவர் எதிர்க்கும் யுத்தமுகத்தில் உன் கடாக்ஷத்தால் உத்தமவீரனாகி தன் ராஜ்யத்தைத் தரிக்கிறான்.

(தா—ம்) முன் ச்லோகத்தில் மந்தர்களோடு மஹான்கள் சிறிதேனும் வேற்றுமையின்றி கலக்கும் ஸௌசீல்ய குணத்தின் ஆவிஷ்கரணம் தயையினுடைய ப்ரபாவமென்றார். இங்கே ஜக



தீச்வரர்களான ப்ருஹ்மருத்ரேந்திரர்கள் தங்கள் அரும் பெரும் ஐச்வர்யங்களைப் பெற்று ஸுகப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகிறார். (66)

தயே துக்தோதந்வத்வ்யதியுதஸுதாஸிந்துநயத:
த்வதாச்லேஷாந்நித்யம் ஜநிதம்ருதஸஞ்ஜீவநதசா: ।
ஸ்வதந்தே தாந்தேப்ய: ச்ருதிவதநகர்ப்பூரகுளிகா
விஷ்வஞ்சச்சித்தம் வ்ருஷசிகரிவிச்வம்பரகுணா: ॥

தயே துக்தோதந்வத் வ்யதியுத ஸுதாஸிந்துநயத:
த்வதாச்லேஷாந்நித்யம் ஜநிதம்ருதஸம்ஜீவநதசா: ।
ஸ்வதந்தே தாந்தேப்ய: ச்ருதிவதநகர்ப்பூரகுளிகா
விஷுண்வந்தச்சித்தம் வ்ருஷசிகரிவிச்வம்பரகுணா: ॥

(ப-ரை) தயே - தயையே! வ்ருஷசிகரிவிச்வம்பரகுணா: - வேங்கடமலையினுச்சியில் உலகத்தைத் தாங்கிக்கொண்டு நிற்கும் பெருமானுடைய குணங்கள், துக்தோதந்வத்வ்யதியுதஸுதாஸிந்துநயத: - பாற்கடலும் அமிர்தக்கடலும் கலக்குமழகுபோல், த்வதாச்லேஷாத் - உன்னோடு கலப்பதினாலே, ஜநிதம்ருதஸஞ்ஜீவநதசா:-ம்ருதப்ராயரையும் உயிர்ப்பித்து உஜ்ஜீவிக்கும் தசையை அடைந்தவைகளாயும், ச்ருதிவதநகர்ப்பூரகுளிகா: - ச்ருதிதேவிகளின் நாக்குகளில் பச்சைக்கற்பூரகுளிகைகளாயும், சித்தம் விஷ்வக்-மனதை (ஆநந்தத்தால்) பிழிவதாயும் (மற்றொன்றை நினையாமல் ஒரே நிலையில் நிறுத்துவதாயும்), தாந்தேப்ய: - இந்திரியங்களை வசப்படுத்தினவர்களுக்கு, நித்யம் - ஸர்வகாலமும், ஸ்வதந்தே - ருசியாயிருக்கின்றன.

தயையே! பாற்கடலோடு நன்றாய்க் கலந்த அமிர்தக்கடல் போல் உன்னுடைய நெருக்கமான ஸம்பந்தத்தால் இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் சக்தியுடையவைகளாயும், வேதங்களுடைய வாய்களில் கற்பூர குளிகைகளாயும், மனதைப் பிழியச் செய்வதாயும் உள்ள வ்ருஷாசலேச்வர குணங்கள் இந்திரியத்தை ஜயித்தவர்களுக்கு எக்காலத்திலும் ரஸிக்கின்றன.

(தா—ம்) அமிர்தம் மரணத்தைத் தடுத்து அதினின்று காப்பாற்றி ப்ராணிகளை உயிர்ப்பிக்கும். அதுபோல தயை

என்னும் அம்ருத குணம் ஸ்ரீநிவாஸனுடைய மற்ற குணங்களோடு கலந்து பாபச்சுமையால் ம்ருதப்ராயராயிருக்கும் ஆத்மாக்களை ஸஞ்ஜீவனம் செய்து அம்ருதர்களாக்கும். கற்பூர குளிகைகளை நாக்கில் வைத்தால் ரஸம் ஊருவதுபோல் தயையோடு கலந்த பகவத் குணங்களை ச்ருதி தன் நாக்கில் வைத்து உச்சரிக்கும்பொழுது ச்ருதியின் நாக்கில் ரஸம் ஊரும். அந்த அம்ருத குணங்களைக் கேட்ட மனஸு தேனடையிலிருந்து தேனைப் பிழிவதுபோல் ரஸத்தைப் பிழியும். (67)

ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரளயரசநாகேளிரஸிகோ
விமுக்த்யேகத்வாரம் விகடிதகவாடம் ப்ரணயிநாம் ।
இதி த்வய்யாயத்தம் த்விதயமுபதீக்ருத்ய கருணே
விசுத்தாநாம் வாசாம் வ்ருஷசிகரிநாத: ஸ்துதிபதம் ॥

ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரளயரசநாகேளிரஸிகோ
விமுக்த்யேகத்வாரம் விகடிதகவாடம் ப்ரணயிநாம் I
இதி த்வய்யாயத்தம் த்விதயமுபதீக்ருத்ய கருணே
விசுத்தாநாம் வாசாம் வ்ருஷசிகரிநாத: ஸ்துதிபதம் II

(ப-ரை) கருணே - தயையே ! வ்ருஷசிகரிநாத:- வேங்கடமலையரசன், ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரளயரசநாகேளிரஸிக: - ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களை உண்டுபண்ணுவதென்கிற விளையாட்டில் ரஸிகனும், ப்ரணயிநாம் - தன்னிடத்தில் ப்ரணயமென்னும் ப்ரீதியையுடையவர்களுக்கு, விகடிதகவாடம் - திறக்கப்பட்ட கதவையுடைய, விமுக்த்யேகத்வாரம் - பரமபதமென்னும் மோக்ஷத்துக்கு ஒரே வாசலாயும், த்வய்யாயத்தம் - உன்னாலாகவேண்டியதான, இதி த்விதயம் - இந்த இரண்டு பெருமைகளையும், உபதீக்ருத்ய - காரணமாகக் கொண்டு, விசுத்தாநாம் வாசாம் - (புருஷகர்த்ருகமல்லாததால்) தோஷமற்றதும் பரிசுத்தமுமான வேதவாக்குகளுக்கு, ஸ்துதிபதம் - துதிக்கப் பாத்ரமாக (ஆகிறான்).

கருணையே ! வ்ருஷகிரிக்கு அதிபதியானவன் ஜகத்தில் [illegible] ஸ்திதி நாசங்களைச் செய்விக்கும் விளையாட்டில் ரஸிக[illegible] ப்ரீதியையும், நம்பிக்கையையம் உடையவருக்கு மோக்ஷத்திற்குக் கதவு திறந்துவைத்திருக்கும் ஒரே த்வாரம் ஆகையும், ஆக இவ்விரண்டு ஆகாரத்தையும் உன்வசமாயிருப்பதால் அடைவதைக் காரணமாகக்கொண்டு மாசற்ற வேதவாக்குகளுடைய ஸ்தோத்ரத்திற்கு அவன் விஷயமாகிறான்.



(தா—ம்) முன்பு இரண்டாவது தசகத்திலேயே உலகத்தைப் படைப்பதும், காப்பதும் அழிப்பதும், கருணையின் கார்யமென்று நிரூபித்திருக்கிறார். ஸ்ருஷ்டி முதலியது ஸம்ஸாரத்தினுடைய வ்ருத்தியாகும். மோக்ஷமென்பது ஸம்ஸாரத்தை அடியோடு தொலைப்பதாகும். ஸம்ஸாரத்தை வ்ருத்தி செய்யும் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களைத் தனக்கு விளையாட்டாக உடைய ஈச்வரன் உன் வசமாயிருப்பதால் தன்னிடத்தில் ப்ரணயத்தைக்காட்டுகிறவர்களுக்கு மோக்ஷத்வாரத்தின் கதவைத் திறந்துகொண்டு வாருங்களென்று அழைக்கிறான். இதையிட்டுத் தான் ப்ராணிகளிடத்தில் ஆயிரம் தாய் தந்தையரைக்காட்டிலும் அதிகமான வாத்ஸல்யத்தையுடைய வேதம் ஸ்ரீநிவாஸனை ஸ்தோத்ரம் செய்கிறது. ப்ராணிகளுக்கு ஸுலபமாய் மோக்ஷம் கொடுப்பதென்கிற தயா குணமிருப்பதாலேதான் சுத்தமான வேதவாக்குகள் ஈச்வரனை ஸ்துதிக்கின்றன. (68)

கலிக்ஷோபோந்மீலத்க்ஷிதிகலுஷகூலங்கஷஜவை-
ரநுச்சேதைரேதைரவடதடவைஷம்யரஹிதை: ।
ப்ரவாஹைஸ்தே பத்மாஸஹசரபரிஷ்காரிணி க்ருபே
விகல்ப(ல்ப்ய)ந்தே நல்பா வ்ருஷசிகரிணோ நிர்ஜரகுணா: (கணா:) ॥ ௬௯ ॥

கலிக்ஷோபோந்மீலத்க்ஷிதிகலுஷகூலங்கஷஜவை
ரநுச்சேதைரேதைரவடதடவைஷம்யரஹிதை: I
ப்ரவாஹைஸ்தே பத்மாஸஹசரபரிஷ்காரிணி க்ருபே
விகல்ப(ல்ப்ய)ந்தேZநல்பா வ்ருஷசிகரிணோ நிர்ஜரகுணா:(கணா:) II

(ப-ரை) பத்மாஸஹசரபரிஷ்காரிணி - லக்ஷ்மியோடு ஸஞ்சரிக்கும் ஸ்ரீநிவாஸனுக்கு அலங்காரத்தைச் செய்யும், க்ருபே - தயையே, கலிக்ஷோபோந்மீலத்க்ஷிதிகலுஷகூலங்கஷஜவை: - கலியின் கலக்கத்தால் வளரும் உலகபாபங்களைப் போக்கக்கூடிய வேகத்தை உடையதும், அநுச்சேதை: - ஓய்வதென்பதில்லாததும், அவடதடவைஷம்யரஹிதை: -

**பள்ளம்** மேடு என்கிற வ்யத்யாஸம் பாராததுமான, **தெவ்ரு வாஹை:** - உன்னுடைய ப்ரவாஹங்களோடு, **அநல்ப:** - சிறுமையேயில்லாமல் மிகப்பெரிதான, **வ்ருஷகிரிவரிண:** - வடமாமலைப் பெருமாளுடைய, **நிஸ்ஸரண:**-அருவிகளின் குணங்கள், **விகல்பந்தே** - ஒக்கின்றன.

தாமரையாளோடு ஸஹசாரனை ஸ்ரீநிவாஸனை அலங்காரம் செய்யும் க்ருபையே! கலியின் கலகத்தினால் உண்டாகும் **மனக்** கசடுகளை கரையை உடைத்து வெள்ளமிட்டு ஓடுவதாயும், **விச்**சேதமற்றதாயும், மேடு பள்ளம் என்னும் தாரதம்யத்தை நீக்குவதாயும் உள்ள உன்னுடைய அனேக ப்ரவாஹங்கள் அதே குணங்களையுடைய திருமலையின் அருவி ப்ரவாஹங்களுக்கு உவமையாகக் கூறப்படுகின்றன.

(தா—ம்) திருமலையின் அருவிகளின் ப்ரவாஹங்கள் பூமியிலுள்ள அசுத்திகளை அடியோடு போக்கிவிடும். கரைபுரண்டு ஓடும் அந்த ப்ரவாஹங்களுக்குத் தட்டுத்தடங்கல் இராது. மேடு பள்ளம் என்கிற பேதத்தைப் பாராமல் எல்லாவற்றின்மேலும் ஓடும். இப்படியே தயையின் கரை புரண்ட ப்ரவாகங்களும், உலகத்தின் கலி கலுஷங்களைப் போக்கும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற பேதத்தைப் பாராமல் யாவர்பேரிலும் மோதி ஓடும். இந்த தசகத்தின் ஆரம்பத்தில் ப்ரளயகால ஸமுத்ரங்களும் வேகமான வெள்ளங்களும் அவிக்கமாட்டாத அவித்யை என்னும் நெருப்பை ப்ருஹ்மஸ்வரூபத்தைவிட பெரிதான ஓரோர் திவலையையுடைய தயையின் ப்ரவாஹம் அவிக்க வலிமையுடையது என்று கூறினார். சரணாகதியை அனுஷ்டித்த உத்தரக்ஷணத்திலேயே ஸ்ரீநிவாஸனுடைய தயை முன்பு அணைபோட்டிருந்தது. வெள்ளமிட்டு அணையை உடைத்து கரைபுரண்டு ஓடி கச்மலங்களையெல்லாம் தொலைத்து மண்டியெறியும் காமமென்னும் அக்நியை அவித்து ப்ரஹ்மமென்னும் அம்ருதானந்தஸமுத்ரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறதென்பதை அங்கே அனுபவிக்க ஆரம்பித்தார். அந்த அனுபவம் இவர் மனதில் வெள்ளமிட்டோடிக்கொண்டிருக்கிறது. இந்த தசகம் முடியுமுன் அதே அனுபவத்தை வேறொரு ப்ரகாரமாக இந்த ச்லோகத்திலும் காட்டுகிறார். (69)



ணாக்ரஹணாபேக்ஷா நாஸ்தி। அநந்தரம் ச புந: க்ரஹணாக்ரஹணாப்யா-
யோரபேக்ஷித இதி ஹி தத்ஸமயோர்வக்தவ்யதே। ததா-
பி ச "விஶிஷ்டவஸ்துந்யந்வயவ்யாபிநீ ஸதி ஸகலவிஶேஷணாநாம்
ஶப்தஸ்ய விஶேஷ்யாம்ஶஸ்ய ச வ்யாப்தி: ஸாகாங்க்ஷதயைகம் வாக்யம்।
ஸ்வோபஜீவ்ய வாக்யார்த்தஸாபேக்ஷஶப்தேந விஶிஷ்டவஸ்த்வ-
ந்வயவ்யாபிநீ வ்யாப்தி: ஸாகாங்க்ஷ்யாயைகம் ச த்ரு-
ஷ்டம், யதா — ஸாந்வயோ ராஜா ஸம்ப்ராப்த:, ஸோ ச ரா-
ஜா ஸத்க்ருத: இதி। ஸத்தா யுக்த: ஸித்தா ஸோ ச த்ருஷ்டேதி ச"
இதி ஶ்ரீஸூக்தி: [illegible] ஸூக்திகந்யா। கிஞ்ச யத்ர
க்ரஹணாக்ரஹணம் நாஸ்தி, க்ரஹணாக்ரஹணாபேக்ஷாவிரஹ, தத்ர
ஸமாப்த்யா ப்ரவ்ருத்த ஆம்நாய இதராங்கவிரோதக்ஷமாபூர்வமே-
வாந்த்யஸ்ய விஶேஷணங்கீகாரேணாபேக்ஷாஸாகாங்க்ஷத்வம் ந ஸ்யாத்।
அநந்யக்ரஹணவ்யாப்ய க்ரஹணாபேக்ஷாஹாநாத்। தஸ்மாத்தாத்பர்ய-
மாவஶ்யமே கஸ்யோ நியத வசந

கிஞ்ச, ஸர்வாங்கோ ராஜா ஸிம்ஹாஸநஸ்தோ திஷ்டதீ
த்யத்ர ஸிம்ஹாஸநஸ்த: விஶிஷ்டஸ்ய நவிஶேஷம் ப்ரூதே, ந ச ராஜ்ஞோ ஸ்வயிஷாநாபூர்வாநம், ததா ஸதி
ஸர்வாங்காநாம் விநா யதா ராஜ்ஞா கேவலம் ஸிம்ஹாஸநஸ்திதம், ததா 'ஸர்வாங்கோ ராஜா ஸிம்ஹாஸநஸ்தோ திஷ்டதீ'தி
ப்ரயோகாபத்தி:। தஸ்ய விஶிஷ்டஸ்யைவ ஸர்வாங்காணாம்
ஸ்வஸ்வாதிஷ்டாநாயிஷ்டாநம் ஸம்பத்யேத। ஏவமேவ ஸ
வஸ்த்ரோ தேவதத்த: பரீக்ஷ்யதே வஸ்த்ரஸ்ய வாசகக்ரியாயாம்
நியதவிஶேஷத்வாத் தத்பர க்ரியாயா: ஸம்பந்த்வ। அந்
யா அவஸ்த்ரோண வாசகஶப்தம் [illegible] ஸவஸ்த்ரோ தேவதத்த:
பஶ்யதீதி ப்ரயோகாபத்தி:। தஸ்ய பரிதஸ்த்ரேண
வஸ்த்ரஸ்ய வாசகக்ரியாயா அந்வயப்ராப்த்யபாவாத் ஏவ। தஸ்ய
"நந வஸ்த்ரஸ்ய வாசகத்வப்ரதாயாஸம்பந்தாஸம்பவா-
தேவ" இத்யாதி க்ரந்தம் வாக்ய ப்ரதாரணமேவ, ந ஸம்பந்தி-
தாயப்ரஸாயகம் ॥

[illegible]



[illegible]

एतदभिप्राय श्रीनारायणचरणाविति सावृत्तिक्यावादिका-
शयज्ञ नेतीव सान्तरम् ॥ “சரணங்களிரண்டென்ன
வொண்ணாது நாலென்னவேணும்” इत्यादिना आचार्योक्ति-
प्रतिपन्नत्वम् । न हि यत्र आचार्योक्तिः वक्तारं समीक्ष्य,
तथा सत्यानन्तत्वस्वरूपवैशिष्ट्यप्रतिपादनात् । अतः उभयत्र
एव । [illegible] श्रियं विशेषणतया प्रतिपाद्य, तदेव
चरणाविति सवृत्तिक्यावादिकाशयस्य प्रवृत्तिप्रतिपादकम्
साक्षात्त्वमभिप्रायविरोध तथा श्लेषया अस्य विशेषण-
स्य लक्षणं बहुविधमभिधानविशेषेऽपि । तस्या-
त्यन्तसिद्धस्य अवस्था तद्विवक्षया नारायण-
पदसामर्थ्यात् श्रीमतो चरणाविति सवित-
वृत्तितद्विषयविवक्षया सांख्यादि [illegible]
नाविव विवक्षितत्वं यथायथं गृहीत्वैव तद्वद्
व्याख्याने “இதிமதிமதம் ப்ராக்ஞ்ஞ, ஶ்ருதியோ
ஹாஸ்யம் தத, தர்மாத்மஸ்ய ப்ரஶிதகம் ஶரணாகதஸ்ய”
इत्यादिना गृहीतम् ॥

यावज्जीवं एतत् । उत्तरत्र श्रीमत इति विशे-
षणतया प्रतिपाद्य श्रियस्तथा प्रतिपादकत्वानु-
यतः प्रत्यवमर्शन्यायसाम्यक इत्युक्तानात्, श्रीम-
त्पदे मतुपः प्रतीतेः न तस्य उपकारकत्व एव
प्रतिपादकतया चरणाविति द्विवचनस्य विज्ञतया उपदेशं
साक्षात्कृतेन च उपकारकत्वात् प्रत्यक्षश्रुत्यर्थस्य च
“ श्रुतिविज्ञाना [illegible] चरणसाधनस्य तस्य सर्वोपाय-
पादेरपेक्ष्य ” इति न्यायविहितपदार्थपदाभिज्ञा-
नायैतदतः स्वमेव कृत्वा ‘इति मतिर्मम प्राक्तनम्’
इत्यनुगृहीतम् । किमेतत् उभयाभिज्ञानात् तु
भावितमतः तस्य दोषैकप्राकतिति वक्तव्यमिति सविशेष-
प्रायः । ‘मतिर्मम प्राकतिति’ दीपिकानुसारिवचनैः ।
मतिर्मतिरिति वक्तव्यं प्राकतिति दीपिकायामेव
व्याख्यातम् । अत्र वक्ष्ये षट्पदसमासेऽत्र



तद्विषयव्युत्पत्तयः । षट्पदसमासे अत्र पुरः
स्थिते श्रियः मङ्गलत्वव्यापकम् सामर्थ्य-
नयः । एतदभिप्रायेणैव चरणाविति निर्देश इति
श्लोकोक्तम् “शब्दसारस्यतः प्रोक्तं वैशिष्ट्यं
प्रयोगे श्रुतम् । विशेष्यचरणयोः न हि बाधिता
सहते” इत्यनुगृहीतम् । एतदेव तात्पर्यानवबोधया
आ वक्तृतया वा समाप्ता तत्संख्यायाः सहचारत्वप्रकृ-
तायुपग्रहकस्य नञ्येकवचनं श्लोके न द्विवितः ।
विशेषणस्य क्रियान्वये चत्वारो बाधकत्वं वर्तत्वम्
इति ‘चरणाविति वक्तव्यम्’ इति तृतीयश्लोके । ‘நாலென்ன
வேணும்’ इति वाक्ये न विशेषणतया प्रतिपादनायाः
श्रियाः क्रियान्वये प्रतिपादिते चरणसमस्तचरणाविति
सवितव्यम्, विवक्षितेव प्राप्यते, तत्र क्रियान्वय-
बाधकम् । अतः श्रियः क्रियान्वयविवक्षायां उभे चर-
णाविति स्यादिति बाधकतया प्रसक्तिः । तस्मिन्
सति- ‘चरणौ’ इति कारिकया । अयं भावः- उभयोरस्य
प्राप्यानुविवक्षायामेवायं नियमः, न तु विशेषण-
विशेष्यभावविवक्षायाम् । अत एव ‘सामान्येन राजा
वदति’ इत्येव प्रयोगः, न तु वदतः इति । सम्प्राय-
यानुविवक्षायां तु ‘राजामात्यौ वदतः’ इति प्रयो-
गः । महाकविरपि विशेषणविशेष्यभाव विवक्षया
‘शत्रोर्व्याघ्रस्य निर्भय वासा’ इत्याह, न तु वा-
दानिति । सम्प्रायानुविवक्षायां तु ‘श्रीसीतारामावादा-
वानिति । ततस्तु उक्तस्य तथास्य त्रिसत्यनिवासा
शरणागतस्य ‘प्रपन्नजनसंरक्षणम्’ इत्यनुगृ-
हीतम् । प्रपन्नजनसंरक्षणार्थितत्त्वयुक्तः । प्रपन्न-
नारायणसंग्रहप्रकाशश्लोकः, प्रधानांशकाव्याहितीय
पदस्य शरणागतस्येति श्लोकस्य । एतद्वाक्यस्य
ज्ञातारो व्यवहरन्ति । न केवलं प्रपन्नज्ञानापेक्षा

த்ராவஸீதி ஹாவஃ | தத்ர கர் வா விஶ்ருகிவக்ஷிதஃ | தஸ்மாத்வஹ ஸ்யகொஷ்கிரவி யாவெஹ்கவ ||

"ஞஶிடதம் ஶாராஸாஹஸதி" தெக்ருதத்தா ஶ்ரீஸாரா ஸாதிந்யாநெஹ ஸாஸ்வஷம் விவ்ருதம் | சதிதீயெ ராஜா யாரம் வஹதீக்ருதெத ஸ்லாவஸஜநவந்தீஜஷி ஸாஹி ரு ஜதிதீயொக்கிம் ந வாயதெ, கித்தா ஸ்லஸஜாநராஜாதுரம் | தத்ர வந்த்யாதிஹிரவி ஸஹி நகாதியஜதிதீயா ந, கித்தா ஸதிதீய ஐத்யுக்திஃ யயா ஸாஹஸம்; தயா வந்த்யாஃ 'ஊதெ கம்' ஐதெக்ருகொஷ்க்யா வாயகவவநஜவி ஸாஹஸஜெவ | தயாத்ர அயெ விஶெஷெண ந ஸதிதீயகஜஹியாய "வரணா நிதி வக்தவ்யதி" தி ஶாராஸாஹஸஜெவ ஞஶிடதிதி ஸஜ ஸ்யஜாநவஞாயஸம்பாஸிவிஜ்ஞவவ நாநாம் ஶ்ருயாநா நஸா ரிகவஸ்ய ஸவஸம்ஶ்ருதிவஹதயா தஞாவெகஷ்ய, 'வரணா நிதி வக்தவ்யம்' ஐதி ஸ்லவ்யா ஶ்ருஸஜ்ஞநகா ஶாராஸாஹஸ திக்ருத்ர கிஜா வக்தவ்யதிதி ஹாவஃ, தஸ்மாத்ராநாஶ்ரூஹீதம் வாக்யத்ரயஜவி ஸஜ்ஞஸஜெவ | தஜெவ ஹவிதவ்யஜெவெதி ஶாஸ்த்ரவரிஶ்ரஜஶாஹிநாம் ஹ்ருதயாஹ்லாதகரஜெவ ஹவெதி க்ருத்ர ந கஸ்யாவி ஶாஸ்த்ரஜ்ஞஸ்ய விஶ்ருகிவக்திஃ |

ஐதஜத்ர விஹாவநீயம் — ஶ்ருதிவாதிஹயக்ஷராயஸம்ஶ ஜொஜஹதிதி வஹதஸ்வ கடியூஸஸ்ய ரஹஸ்ய ஶ்ருஸாநெ மொகாவாயஶ்ருவதிதவயெ யஸ்யஹிஜாநஃ வாஸ்தவிகஃ, தஹா ஸ கயம் வெதாஹுதெஶிககடாக்ஷவிஷயஹவாயஸ்யாகஃ | மொகாவாயரஹஸ்யஶ்ருஸாநம் ஹி ஞுதிக்ருஷ்டிம்ஶ்ததஹஸ்ய காரஶ்ருநஸம்ஶ்ருதாயவிரஸம் | ஸம்ஶ்ருதாயகொஹ்தெகஃ ஶ்ருஜாணாநாதெரண கெவஹயாஷ்டயாக கஷ்டதிக்ருஹிஶ்ரா யெணவெ ஹி ரஹஸ்யஶாஸ்த்ர ஸிஜாவாயஶாயநெ 'கடியஸம்ஶ்ருதாயவிரஸமாகப் பண்ணும்விவஹாஶஜநவ வஞம்' ஐத்யநாஶ்ரூஹீதம் | ஜெதஃ ஷ்டிம்ஶ்ததஹஸ்யாம் ஶ்ருயஜஶ்ருவெஶ "குஶ்ருயண வேஶோயோ மொஹ வேஶயோ



வாசியற ஒரு ஜிய நமோ உதெஶ்யம்" ஐதி ஸாஸஷஜெவ விவிதஜஹி | சயஹ ஜஹெஜ்ஞ ஆயக்ஷிஷ்யஷ்டாயஃ 'வாசியற' ஐதிஹ்யக்தம் | வாசிஹெதஃ, சக்ராஹிதெநெதி ஹாவஃ | குஶ்ருயணதஶாயாம் விஶிஷ்டசயா வா ஸஜஶ்ருயாநதயா வா ஶ்ராவ்யதஶாயாம் தெகஷ்யெயாதெஶ்யதயா வ உஹயொர தெஶ்யதாயாம் வெஷஜ்யம் நாஸ்தி தயாஶயொஉவஶஜ்யெத | அயெ உஹயத்ர விஶெஷண சயா ஹாநெஉவி உவக்ஷணகவிஶெஷணகவாரவெவெஷஜ்யம் நாஸ்தி நிக்ஷ்யஷ்டாயஃ | யத்ர, குஶ்ருயணதஶாயாம் ஹஶவத உவாயதயா ஶ்ரியஶ்ச வாரஷகாரதயா ஜியாநவெஸ்யாதெஶ்யகம் மொஹதஶாயாஞ்ச தெகஷ்யஸ்ருதிஸாவாஸி சயா ஜியாநவெஸ்யாதெஶ்யகவிக்ருவராவிநகஷநம் | தச 'வாசியற' ஐதி சஹாகிவிரஸம் | குஶ்ருயணதஶாயாம் ஶ்ரியஃ வாராஷகாரகஜாத்ரம் ஹஶவநாத்ர ஸ்யாவாயகஞ்ச வரஸ்வரம் விஷஜெவ, தஹா 'வாசியற' ஐத்யுக்திஃ வரிக்ருதா ஸ்யாக | அத்ர குஶ்ருயணதஶாயாம் வாரஸ்வரணப்ரகாரவெவெஷஜ்யெவி ஜியாநவெஸ்யொதெஶ்யகாக ஶ்ராவ்யதஶாவெவெஷஜ்யஞாஸ்தி காஸ்யதிஶ்ச | 'ஶெஷஶெஷாஶநாதிஸமம் வரிஜநம் ஹஶவதஸ்தத்வஸ்யொதிதவரிவயாயாஜ்ஞாவயஜெத்' தி ஶ்ரீவெங்கடணாஶ்ய ஶ்ரீ ஸக்திஜவஜஜஸ்ய மொஹதஶாயாம் ஹஶவகஜெகஷ்யதியொகத்ரகஜொத்ரண உதெஶ்யகஸ்யாவஶஜவி ஜியாநொதெஶ்யகவஸ்ய வாயகாஹாவெந ஶ்ரியஃ கெங்கயெயாதெஶ்யகம் ஜாஸ்திதிஶ்ருதிவாதன ஜாநஜெவஹவதஶ்ரணதிதி ஜநஹெ | வஸ்தஸ்தஸ்த ஶ்ரியஃ வாராஷகாரஹாவெநாதெஶ்யகம் ஹஶவஞஜவாயதயா ஶ்ருயணதஶாயாம் வா தகவதிவம் வெக்தி விவெவநீயம் | ஹஶவதா ஶ்ருயணஶ்ருதிவஸக்ஹது தஹஶவதிஶ்ர ஹநிவ்ருத்தயெ வரம் ஹஶவதா ஶ்ருயணாக வதிவம் வாராஷகாரவாரஸ்வரணம் | ஔக்திகெஷ்வவி காயெஷம் மொக விஜஶ்ச வவதாயாரஃ, தமெவ ஹஶவத்ஹராஷ்ட்ரகாவெரவவி ஶரணாஶதிஶதெவாவக்ர ஜ 'ஹ ஐஞாராயணாதி நா நரதெவ்தி அதிணிதயா ஶ்ரீடம் ஶ்ருபஜம் வாராஷகார

நெஞ்சிற்பட்டிருப்பது திண்ணம். "யாஜே ந வஸிஸோஷயே" என்றார் பெருமாள்; ஸோஷணம் வ்யூஹகாயம் என்றான் ராவணன். ஒரே ப்ரகரணத்தில் ஒரே விஷயத்தில் ஒரே ஶப்த ப்ரயோகத்தை ரிஷி செய்ததற்கு இப்படி வேறு வேறு பொருள் உரைக்கலாமோ; இந்தப்பிடிவாதபயங்கரர் ரிஷிக்கு ஒரு தாரணஸமம் கூறுவர். பெருமாளுக்கும் மரணஸங்கல்பத்தில் பிடிவாதமுள்ளவர். ரஸிகர் இவரைத் தள்ளி ரிஷியின் பயத்தைத் தீர்ப்பர்.

2. பெருமாள் ஶோஷணோபாயத்தை ஸபையில் முன்பே கூறியதுமன்றியில் ராவணனும் விபீஷணனிருந்த தன் ஸபையில் "ஸமுத்ரமுச்சோஷயதி வீர்யேணாஸ்ய கரோதி வா" என்று ஸமுத்ரத்தை சோஷிப்பித்தாவது வேறு வீர்யச் செய்கை செய்தாவது ராமன் லங்கை சேருவது திண்ணமென்று பேசினான். ராவணஸபையில் ஒருவரேனும் கடல் குறுக்கேயிருப்பதால் லங்கை சேருவது கஷ்டமென்று பேசினாரில்லை. விபீஷணருக்கும் கடலை வற்றச் செய்வது ஸுகரம் என்பது தெரிந்ததே. பெருமாளும் "ஸமுத்ரம் ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" என்று தமக்குப் பூர்ண சக்தி உண்டென்று முதலிலேயே சொன்னார். சக்தியிருப்பது கார்ப்பண்யத்தை அழிப்பதால் சரணாகதி என்பதற்கு அடிப்படையே சூன்யம். சக்தி பூர்ணமாயிருப்பவர் சக்தியில்லையென்று நினைப்பதும் பேசுவதும் பொய்யாகும். மனுஷ்யாவதாரத்தில் தனக்குள்ள பூர்ணசக்தியைத் தான் பெருமாள் பேசினார்.

3. வருணன் ஸாகரத்திற்கு அபிமானியான தேவதை. பரசுராமரிடம் க்ரஹித்த விஷ்ணு தனுஸை அநேக தேவர்கள் வந்திருந்தும் வருணனிடம் கொடுத்து வைத்தார். தங்கள் குலப் பெரியோர் வெட்டி வைத்து ஸாகரஸ்வரூபமென்னும் உடலைப் பெற்று மஹிமை பெற்றவன் என்று அவனிடம் அபிமானம் போலும். வருணன் அதை அகஸ்த்யர் மூலமாக ஸ்ரீராமனுக்கு அவருடைய அநுக்ரஹத்துடன் சேர்ப்பித்தான். அந்த வில் ராக்ஷஸயுத்தத்திற்கு முதலான கரயுத்தத்தில் 3-வது வில்லாக உபயோகிக்கப்பட்டது. பின்பும் கடைசி வரையிலும் அதைக் கொண்டு யுத்தம். ஹநுமார் லங்கை தாண்டுகையில் ஸ்ரீராமனின் பெரியோர்கள் தன் ஸ்வரூபத்திற்கும் மஹிமைக்கும் மூல



பூதரானதால் மைநாகத்தைக்கொண்டு ஹநுமாருக்கு உபசாரம் செய்தது திருவடி மூலமாய் ராமனுக்குத் தெரியும். வருணன் முதலிய எல்லாத் தேவர்களும் பெருமாளைச் சரணம் புக அவர்கள் ஆபத்தைத் தீர்க்கவே அவதாரம். அவர்களை ரக்ஷிக்கவே ஸீதையைப் பிரியவிட்டது; லங்கைக்கு சத்ரு கொண்டுபோக விட்டது. பெருமாள் ஸேனையுடன் வந்ததும் அவர் தூதனுக்குச் செய்த ஸஹாயம் போல தானாக உடனே ஸஹாயம் செய்யக் கடமைப்பட்டவன். பெருமாள் வரும்போது பொங்கினான், உத்ததனானான், கர்ஜித்தான், கோபத்தையே காட்டினான். அவனுக்கு ஸத்யோதண்டம் நியாய்யமாயினும் பெருமாள் க்ஷமையை அவலம்பித்தார். அபராதியின் குற்றத்தை க்ஷமையால் பொறுத்தே வந்தோமென்று பின்பும் பேசுகிறார். அபராதியை க்ஷமித்ததென்கிறது அந்த அபராதியினிடம் பெருமாள் சரணாகதியைப் பண்ணினார் என்பதோடு ஸ்வப்நத்திலும் பொருந்துமோ? சரணாகதி செய்கிறவர் ப்ரபுவை க்ஷமிக்கிறார் என்றும் ஒருவர் பேசுவரோ! க்ஷமையை அவலம்பித்தோம். அது தப்பு; ஸாமோபாயத்தைக் காட்டினோம், அது தப்பு, அதற்கெல்லாம் இவன் அயோக்யன் என்று பின் பேச்சு. சரணாகதி ஸாமோபாயமாகுமோ; ஸாமத்தை அங்கீகரிக்காவிடில் தண்டம் என்று பேசுவது தான் இந்த யுத்த வீரப்ரகாணத்திற்குப் பொருந்தும். பின் பேச்சும் முன்பேச்சும் செய்கையும் அப்படியே. கிடக்கையிலும், "ஸம்யக்ப்ரஹ்ரஸந்நாஶம் ஶத்ரூணாம் ஶோகவர்த்தநம் | ஸுஹ்ருதாநந்தநம் தீவ்யம் ஸாமராஜவ்யவாஶ்ரயம் ॥" என்று 6-ம் ச்லோகத்தில் இரண்டு ஆகாரமும் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டது. முன்பு சத்ருத்வேமரணம், பின்பு ஸுஹ்ருத்வேஆநந்தனம் என்கிற க்ரமம். இதற்கும் ஈடு மேக்கும் நடுவில் $1\frac{1}{2}$-ச்லோகம் இங்குள்ள க்ரமத்தைத்தான் ருஷி அங்கேயும் பேசினார். நாம் மாற்றலாமோ? ருஷி க்ரமத்தையே பேசியுள்ள ஈட்டின் க்ரமத்தை மாற்றலாமோ? ஈடு தாத்பர்யத்தை உரைக்கிறதா? அரிச்சுவடிப் பிள்ளைகளுக்கு பதங்களுக்குத் தமிழ்ப்பர்யாய பதங்களைச் சொல்லுகிறதா?

4. ஸமுத்ரம் இரண்டு படைகளுக்கும் பூர்வஸித்த ஸந்நிவேசத்தால் குறுக்கேயுள்ளது. பெருமாள் ஸேனையைத் தடுக்க

வேணுமென்று குருக்ஷே வரவில்லை. ஸேதுபந்தத்திற்கு இடங் கொடாவிடில் ஸமுத்ரத்தின்ஸ்வரூபஸத்தையே பெருமான் விரும்பிச் செய்யும் தேவகார்யத்திற்கு பாதகம். பெருமான் அவனை யழித்துத் தரையாக்கச் சக்தியுடையவரென்று எல்லோருக்கும் தெரிந்ததே. அப்படிக்கிருந்தும் அவன் அழியாமல் பிழைக்க வேண்டுமே, உலக க்ஷேமத்திற்கு அவனிருந்து ஸேது நிர்மாண மாகவேணுமே என்பது பெருமாளின் கருத்து. தேவனையழிப்பது அழகன்று; அவனுக வலுவில் வந்து அணைகட்ட ஸௌகரியம் செய்யவேண்டும். தேவகாரியத்திற்கு விரோதமாக தேவனை ஸ்ருப்தனுய்க் குதிக்கிறுன். அவன் கையில் ஒப்புவித்து அவன் திருப்பி அனுப்பிவித்த வில்லைக்கொண்டு அவனைக் கொல்லுவது அழகல்ல. தம் குலப் பெரியோர் உண்டுபண்ணி வளர்த்த மூத்தோனுண தேவன் தம் ஜ்ஞாதிபோன்றவன். விபீஷணர் 'ஸமுத்ர ராஜன் தன் ஞாதியான ராமருக்கு வேண்டிய கார்யத்தைச் செய்யத்தக்கவன்' என்று 32-ம் சுலோகத்தில் பேசினர். "கர்தவ்யம் ராகவஸ்ய ஜ்ஞாதேஃ கார்யம் ஸாகரேண" என்று அவர் பேசிய சுலோகத்தில் ஜ்ஞாதே: என்றிருப்பது இவர் பக்ஷத்தைக் கொல்லுவதால் அதை மறைத்து, ஜ்ஞாத்வா என்ற பாடம் பக்கம் 8-ல் படிக்கிறுர். வருணன் பிழைக்க வருணனை ஓர் அஞ்ஜலிமட்டும் செய்தால் அவன் பிழைக்கஇசைவனே என்பது அஞ்ஜலி கரணத்தின் கருத்து.

5. இரண்டு படைகளுக்கும் நடுவேயிருக்கும் ஸமுத்ரத்திற்குத்தான் பெருமாளிடத்திலிருந்து ஆபத்து வந்திருந்தது. பெருமாளிடமிருந்து அவனுக்கு வந்திருக்கும் மரணபத்திலிருந்து அவனுக்குத் தரணம் வேண்டும், அவன் பிழைப்பதைப் பெருமாள் பேசுகிறுர். அவரிடமிருந்து அவன் மரணத்தை அடைவதா? அல்லது அவன் ஸந்நிவேசத்தால்தான் குருக்ஷே பூர்வஸித்தமாயுள்ள நிலைமையால் தனக்குப் பெருமாளிடம் இருந்து கட்டாயம் வரக்கூடியதாயிருக்கிற ஆபத்திலிருந்து அவனுக்குத் தரணம் வருவதா என்பது இங்கே ஸர்வஸந்தர்ப்பங்களாலும், முன் பின் பேச்சுக்களாலும், முன் பின் செய்கைகளாலும் ராஜ்யதந்த்ரத்தையும், ஈச்வரதந்த்ரத்தையும் அநுஸரித்துக் கொள்ளக் கூடிய ஓர் விகல்பம். இவர் போன்ற துராக்ரஹிகளுக்கு நடுவிறுள்ள



ஓர் அரை சுலோகப் பேச்சைப் பற்றி ஸம்சயம் வந்தால் வாக்ய சேஷத்தையும் முன் பேச்சுக்களையும் பார்த்து அவற்ருேடு ஏகரூபமாய் பொருள் கொள்ளவேண்டும். 1914-ம்வருஷத்தில் யுத்தம் வந்தபொழுது ஜர்மனிதேசத்திற்கும் பிரஞ்ச்தேசத்திற்கும் நடுவில் பெல்ஜியம் இருந்ததால் அதற்கு விபத்து எப்படி ப்ராப்தமாயிற்றே, அப்படி இங்கே ஸமுத்ரத்திற்கும் ஆபத்து வந்திருந்தது. யாருக்கு ஆபத்து வந்ததோ அவர்களுக்கு மரணதரணங்கள் ப்ராப்தங்களல்லவோ ?

6. பெருமாள் அவதாரத்தின் ஓர் முக்யகார்யம் ஸேதுநிர்மாணம். பெருமாள்திருமேனியின் தர்சனமாத்திரத்தால் பாதகங்கள் போகுமென்பர். அதுபோன்ற மஹிமை ஸேதுதர்சனத்திற்கு உண்டு. உலகமுய்ய ஸேதுநிர்மாணம் செய்வதாக மனோரதம். 'வ்ருக்ஷ்ய வஹவா தகவ்ருஸஜெஹதவான ஸேதுவை' சாச்வதமாய் ஏற்படுத்தியது ராமாவதாரத்தில் முக்யமான தயா கார்யமாக தயாசதகத்தில் ஸாதிக்கப்பட்டது. மூன்று நாள் பட்டினி கிடந்து தர்ப்பங்களில் சயனித்துத் தவம் பண்ணி சம்பளமில்லாக் கூலிகளாயும் அநங்யபரர்களுமான வாநரர்களைக் கொண்டு விச்வகர்மாவின் புத்ரனுன நளன் கையால் ஸேதுவைக் கட்டி பாவக்கடலை ஜனங்களைத் தரணம் செய்துவைக்க பெருமாளுடைய ஓர் சுபமனோரதம். அம்ருதஸேதுவாகிய பரமாத்மா கட்டிய ஸேது. அதற்குத்தான் தர்ப்பசயனமும், மூன்று நாள் தவமும் அவச்யமாகலாம். சரணுகதிக்கு அங்கமல்ல என்பது திண்ணம். ஜநங்களைப் பாபச் சிறையிலிருந்து விடுவிக்க ஸீதை சிறையிருந்தது. ஸ்வர்கஸ்திரீகள் சிறையை விடுவிக்கமட்டுமன்று; 'ஸீதாவகஸ்ஸாஹஸ்ஜெஹதவாயிற்று ஸேது' என்றதற்கும் இதுதான் கருத்து. இதற்கு ஓர் தேவன் குருக்ஷே நிற்கலாமோ ?

7. 'ந வாத்ரா ஸவதாரம் நீதஃ' என்று ஹநுமாரைப் புகழ்ந்த ராமன் தனக்குப் பூர்ணசக்தியிருக்கையிலும், சரண்மடைவரோ ? ருஜுவாக அப்படி நினைக்கமுடியுமோ ? தனக்கு வேறு கதியில்லை என்றல்லவோ அத்யர்தாசக்தியை நினைத்தும் சொல்லியும் ப்ரார்த்திக்கவேண்டும். இங்கே ஏதேனும் ப்ரார்த்தனைப் பேச்சு உண்டோ ? பேச்சும் புத்தியுமில்லாமல் சாணு

கதியுண்டோ ? ராமஸுக்ரீவஸக்யத்தில் பரஸ்பர சரணுகதி உண்டோ ? லக்ஷ்மணர் பெருமாளை ஸமர்ப்பித்தாரோ ? தம்பி தமையனை ஸமர்ப்பித்தாரோ ? சேஷன் சேஷியை ஸமர்ப்பித்தாரோ ? காகம் தான் சரணுகதி பண்ணிற்ரு ?

8. விபீஷணர் 'ராமன்குலப்பெரியோர் ஆக்கிவளர்த்து ஆளானவர்; ஜ்ஞாதி, பெரியவர், வ்ருத்தஜ்ஞாதியைப் பிரார்த்தித்தால் அவர் ஜ்ஞாதி செய்யவேண்டிய கார்யத்தைச் செய்வர்' என்ருர். இவர் இது செய்தால் அவர் அது செய்வர் என்ருர். க்ருதத்திற்கு ப்ரதிகரணம் என்று ஒப்பந்தம்போலும்; அவர் சரணம் என்ற வார்த்தை ஈட்டில் பரிஹஸிக்கப்பட்டது. அந்த வார்த்தையே உபஹாஸ்யந்தான். தவறுதலான அந்த வார்த்தையை சரணுகதிபரமாக அங்கு ஒருவரும் அர்த்தம் கொள்ளவில்லை. பெருமாள் காதில் அந்த வார்த்தை விழவில்லை. பெருமாளிடம் சொன்ன ஸுக்ரீவர் ஸாகரத்தின் 'உபவேசநம்' என்ருர். பெருமாள் செய்தது 'வூகிஸயநம்' என்ருர் ருஷி. மந்த்ராலோசனையில் லக்ஷ்மணர் ஆலோசித்து 'ஸாமறொரயம் நியுஜ்யதாம்' என்று நியோகம் செய்யவேண்டியதென்று சொன்னுர். அதுதான் முடிவு வார்த்தை, முடிவான மந்த்ரம். விபீஷணர் நாக்கில் தவறுதலாக வந்த சரணப்பேச்சிற்குத் தாத்பர்யம் உபவேசனம் என்று ஸுக்ரீவர் கொண்டார். பெருமாளிடம் அதையே சொன்னுர். பெருமாள் கேளாத ஸர்வோபஹாஸ்யமான மற்றொருவர் சரணப் பேச்சினுல் பெருமாளைக் கட்டுப்படுத்த முடியுமோ ? விபீஷணன் ராஜ்யகாங்க்ஷீ என்ற பெருமாள் பேச்சையும் தள்ளி விபீஷணன் பேச்சைக்கொண்டுதான் அவன் மனதை அறியவேண்டுமென்று தீர்மானித்து அவனுக்கு ராமபதப்ராப்திதான் பலம் என்று தீர்மானிக்கவில்லையோ ? யார் பேச்சைக்கொண்டு யார் அபிப்ராயத்தைத் தீர்மானிப்பது? அதிலும் காதில் விழாத பேச்சு. விபீஷணர் பேசின ஒன்றரை சுலோகம் சரணுகதிக்குத் துளி ஒட்டுமோ? 'உவவெஸநம்' என்பதற்கும், 'வூகிஸயநம்' என்பதற்கும், 'நியொஜநம்' என்பதற்கும் சரணுகதி பொருளோ? மூன்று நான்கு வார்த்தைகள். முடிவு மந்த்ரம் நியோஜநம். அத்ய மே ச்லோகத்தில் முடிவாக லக்ஷ்மணர் குறித்த ஸாகரநியோஜநத்தைக் காண்கிரேம். தண்டவிதாக

பயபூர்வகமாக தாணுநகூலப்ரவ்ரு[illegible]ப்படுகிற இவ்வளவு காலம் பொறுத்தது கருணுகார்யம். ப்ரபத்தாவி கருணை ப்ரபத்திக்கு ப்ரயோஜநமாகாது.

9. 'ப்ரத்யுபவேசனமாகிற உபாயம் ஒன்றே நிஷ்கர்ஷிக்க பட்டது. அதில் விகல்பமே கிடையாது' என்பது இவர்க சுவடி. ப்ரத்யுபவேசநம் சரணுகதியன்ருதலால் சரணுக பக்ஷத்தைக்கொண்டு ப்ராதிகூல்யவர்ஜநம் வேண்டாவோ என் ஆக்ஷேபம் தொலைந்ததே. மற்றோரிடத்தில் "ப்ரத்யுபவேசநப் அல்லது 'சரணுகதி' என்று இவர்களுக்கே ஸந்தேஹமாய் விக பம் பேசுகிருர்கள். இப்படி ஸம்சயமான விஷயத்தைக்கொண்ட 800-வருஷங்களாகப் பெரியோர்கள் படன பாடனம் செய்ததை மாற்றப் பார்ப்பது. இவர்களுக்கே ஸந்தேஹமான விகல்பப்பேசினுலும், மனத்தினூசலாட்டத்தாலும் சரணுகதி நிர்த்தாரண அழிந்ததே. 'இதனுல்பெருமாள் சரணுகதிக்கு அல்லது ப்ரத்யு வேசநத்திற்கு அதிகாரியல்லரென்று சொல்லவேண்டித்தாகு ம தனையல்லது வேறென்றும் சொல்லப்போகாது" என்று இவர்க பேச்சு. 'சரணுகதி' வேறு, 'ப்ரத்யுபவேசநம்' வேறு என்றிவர்க ஒப்பினது ஸந்தோஷமே. ஸ்வயம் ஸம்சயதாணத்திற்கு யோக் தையில்லாதவர்கள் 800-வருஷத்திய படநபாடநங்களை ஆக்ஷே பிக்கக் கூடுமோ ? 13-ம் பக்கத்தில் 'ப்ரத்யுபவேசன தந்த்ர அன்றோ இது' என்று இவர்கள் பேச்சு. அங்கே ப்ரத்யுபவேச பக்ஷமில்லை. சரணுகதி பக்ஷம் தொலைந்தது. இவர்கள் புத்தி டோலோத்ஸவம் கண்டருளுகிறது. அந்த உத்ஸவபூஜைதான் இவர்கள் புத்திக்கு ஏற்றது. எமது 3-பக்கச் சுருக்கப்பேச்சுகள் இவர்கள் புத்திக்கு இந்தப் பூஜாபோகத்தைக் வடனை செய்தன

10. பெருமாளுக்கு மரணஸங்கல்பமில்லை என்று இப்புதுச் சுவடியில் உறுதிவந்தது. அபிஜ்ஞர் சொல்லுகிருர்களென்று பேசி நிகண்டுகளை உதாஹரித்து ப்ராயோபவேசபக்ஷத்தை முன் அவலம்பித்தார். ப்ராயோபவேசமானுல், மாணம் நியதமாக வேணும். யத்யாலிங்கிதமான ப்ராயோபவேசம் கிடையாது. 'ஞூரயொவவிஷம் வஷு விஷ வஷதாம்' என்று கங்கைக் கரையில் பரீக்ஷித்து செய்த ப்ராயோபவேசம்போல் நியதமரண மாயிருக்கவேணும். ப்ரத்யுபவேசனம் ப்ராயோபவேசமன்று. பெருமாள் செய்ததை ப்ராயோபவேசமென்று இவர் பேசியதால் இத

ற்கு சில்ஷத்ருசஆகாரங்களேயுடைய பரதன்செய்கைப் பேச்சைப் பெருமாள் நிஷேதித்தாரென்று கேட்டோம். அது அப்யுபகம வாதப் பேச்சு. ப்ராயோபவேசமன்றுஎன்றே எம் தீர்மானத்தை முன்பே பேசினேம் ப்ராயோபவேசமென்று ஆடம்பரம்செய்து ஸ்வமரணஸங்கல்பத்தைத்தான் 'ஸீதே மரணம்'என்று பெருமாள் பேசினதாகஇவருடைய முன் விவரணம்.இப்போது அதுதொலைந் தது.பெருமாள் பிழைத்தார். பெருமாள் மரணஸங்கல்பமே செய் யவில்லை என்று புதுச்சுவடி. 'வெறும் வாசோயுக்தியே யொழிய பெருமாள் மரணத்தைக் கருதவேயில்லை' என்கிறார். மரணதாத் பர்யமே யில்லாமல் மரணப்பேச்சாம். என்ன புத்திகௌசலம். பெருமாள் இங்கே பேசவேயில்லை. பேசி யிருந்தாலல்லவோ வாசோயுக்தி என்னலாம். லக்ஷணை என்னலாம்.'இதிமதிம்ருத்வா' என்று ருஷி கதை சொல்லுகிறார். மரணநினைப்பில்லை என்று ஒப்புக்கொள்ளுவதால், ருஷி சப்தத்தால் சொல்லும் மரணப் பேச்சு பெருமாள் மரணத்தைப் பற்றியதல்ல என்பது நிச்சயம். ஸாகரத்தின் மரணந்தான் என்றுபுராதனஈடும், பிள்ளையும் கோவிந்தராஜரும், திலகரும் காட்டியதுதான் நின்றது. முன்பும் பின்பும் ஸாகரமரணப்பேச்சே உளது. பின்பு ஸாகரமரணத் யோகமும் நடந்தது. யாரோடு இங்கே பெருமாள் பேசினார்? பிறருக்குத் தம் உறுதியை லக்ஷணையாகக் காட்டுவதற்கல்லவோ வாச்யப்பொருளில் தாத்பர்யமில்லாமல் சப்தங்களைப் ப்ரயோ கிப்பர்.

11. விகல்பம்இப்படியிருக்கவேணும்,அப்படியிருக்கவேணும் என்று பல பக்கங்களில் முன் சுவடி,பெருமாள் ஸாகர மரணத் யோகஸம்ப்ரமத்திற்கு மேல் ஸம்ப்ரமத்தை வற்புறுத்திக் காட் டியது. இப்பொழுது இவர் சுவடி விகல்பமே கிடையாதென்று தீர்மானிக்கிறது. ஸாகரதரணம் ஒரே கல்பம்தான் என்கிறார்கள். பெருமாள் நினைப்பு, ருஷிப்பேச்சு, ஈடுமுதலிய எல்லா க்ரந்தங் களின் பேச்சு, இவர் முன் க்ரந்தப் பேச்சு எல்லாம் இரண்டு வைகல்பிக கல்பங்களைக் காட்டுகின்றன. எம் சிறு விமர்சத்திற்கு பிறகு ஒரே கல்பம். பெருமாள் சபதம் பேசியதாகச் சொன்ன லும் நாம் காட்டிய மூன்று யோஜனைகளும் பழைய ஈட்டுக்க பத்தில்தான் பர்யவஸிக்கும். இவர் தாம் க்ரமத்தை அக்ரமமா மாற்றுகிறார்.



12. "அத்ய ஸீதே ஸாகரஸ்ய தரணம் வா, (ஸீதே) மரணம் வா' என்கிற ஒரே அந்வயம்தான் பெருமாள் திருவுள்ளத்தி லும் வால்மீகி அபிப்ராயத்திலும்" என்று 16-ல் தீர்மானம். இவர்கள் சொந்த அச்சுப்பிசாசுகூட பெருமாள் வாக்கில் (ஸீதே) மரணம் என்னும் பேச்சை ஸஹிக்கவில்லை. மரணவார்த்தை பேசும் தொண்டையைப் பிடித்து மரணத்தில் விட்டது. இவர்கள் நினைப்புக்குத் தக்கபடி இவர்களைப் பேசவும் எழுதவும் விடவில்லை. இவர்கள் நினைக்கும் அந்வயத்தைப் பார்ப்போம். ருஷி க்ரமத்தை இவர் பாதித்தார். ஸர்வஜ்ஞன் க்ரமத்தை இவர் பாதித்தார். அஸ்வரஸமென்று மாற்றினார். 'ஸீதே மரணம் வா' என்பது வாசோயுக்தி என்றார். வாக்யத்திற்கே லக்ஷணை' ஸீதே ஸாகரஸ்ய தரணம் வா— 'ஸமுத்ரமாகிய என்னுடைய' என்று ஸமாநாதிகரணாந்வயப்ரதீதி முதலில் வரும். ஸமாநாதி கரணாந்வயஸ்வாரஸ்யத்தைத் தள்ளவேணும். தள்ளும் 'என்னு டைய ஸாகரத்தினுடைய'என்றபொருள் வைப்பைத் தள்ளுகிறது. ஸீதே ஸாகரதரணம் என்றல்லவோ சரித்ரம் பேசும். சரணா கதி பண்ணுவதால் ஸாகரம் இவருக்கு ஸ்வகீயமாகுமோ? சரணத்வேந வரிக்கப்படும் ஸாகரத்திற்கல்லவோ இவர் ததீயர். "ஸமுத்ரஸ்ய ஸீதே" என்றல்லவோ பேசவேண்டும். ஸாக ரஸ்ய ஸீதே' என்று அபேதமான தாதாத்ம்யப் பேச்சோ. சரணாகதிக்கு பேதஜ்ஞானம் இருக்க வேணுமே. ஸாகரத் தைக் கூப்பிடாமலே இங்கே சரணவரணம். 'ஸாகரம் வா ஸீதா' என்றல்லவோ சரணவரணம் பேச வேண்டும்.

12. 'ஸீதே என்பதற்கு ஸீதே' என்று பொருள் கொண்டால் க்ரமப்படி அந்வயம் ஸரளமாய் ஏற்படுவது ஸ்பஷ்டம். இதற்குப் பதில் பேசமுடியாமல், 'ஒரு வ்யாக்யாதாரும் காட் டினதன்று' என்கிறார். இதுதானா பதில். இதுதான் ஈட்டுக் கும், பிள்ளைக்கும், கோவிந்தராஜருக்கும் திருவுள்ளம். ஒரு வ்யாக் யாதா 'ஸாகரஸ்ய ஸீதே மரணமேவ வா ஜநி யுக்திம் கூறுவா'என்று கூறினார். 'ஸீதே'என்பதற்கு 'ஸீதே'என்றும் ஸாகர த்துடைய மரணத்தீர்மானமும் காட்டப்பட்டது. பஞ்சமப்

பொருள் அவச்யமானால் கொள்ளலாம். அதை மறுக்கமாட்டோம்' என்கிறார். ஸ்வாரஸ்யத்தை வேண்டியது காட்டியுள்ளோம். முன் வாக்யாநத்தையும் பஞ்சம்யர்த்தத்துக்கு ஆதாரமாகவும், ப்ரகரணப்ரயோகத்தையும் காட்டினோம். 'என்னிடமிருந்து ஸாகரத்திற்கு தரணப்ராப்தி, தரணகர்மத்வப்ராப்தி' என்றாலென்ன தோஷம். "உச்சோஷணம் பண்ணியாவது உடனே லங்கை சேரும் த்வரையுள்ளவரும், உச்சோஷணத்திற்குரிய ஸாமர்த்தியத்தையுடையவரும்சத்ருநாசகமானமஹாபாஹுவைநீட்டியிருப்பவருமான என்னிடமிருந்து (பீதஃ) ஸாகரத்திற்கு (பய)தாரணம்" என்று தாத்பர்யம் எப்படிப் பொருந்துகிறது பாருங்கள். பீதா பயாத்ராணம்- பெருமாளல்லவோ ஜகத்துக்கு பயஹேது. அவரே அபயஹேது. பயக்ருத் பயநாஶநஃ. இங்கே முதலில் மரண ப்ரஸஞ்ஜகவிசிஷ்ட நியோகம். அதைப் பூர்வபக்ஷமாக்கப்பேசி ஸாகரத்திற்கு பயநாசனமென்னும் தரணம் உத்தரபக்ஷமாகப் பேசப்பட்டது. பூர்வபக்ஷமான ஸாகரமரணத்தை, இவன் பிடிவாதத்தால் ஸித்தாந்தமாக்காமலிருக்கவேண்டும் என்றும் பெருமாள் ஆசை. தம் நோக்கு ஸாகரத்தின் பயதரணத்திலும், தன்னிடமிருந்து ஸாகரத்தின் தரணகர்மத்வப்ராப்தியிலும், உலகத்தின் பாபஸாகரதரணத்திலும், தீவ்ரமாயுள்ளதால், அதைஉத்தரபக்ஷமாக நினைத்தார். வருணனோடு பேசவேதிருவுள்ளமில்லை. ஜ்ஞாதிப் பெரியோனென்றதை யிட்டு ஓர் அஞ்ஜலியே செய்யப்பட்டது. நினைப்பிலும் அவனைக் கூப்பிடத்திருவுள்ளம் இல்லை, ஸர்ப்பம்போல பீஷணமும் சத்ருநாசகமுமான பயங்கர மஹாபாஹுவை நீட்டி பயத்தையும் ஸ்நேஹத்தையும் காட்டப்பட்டது. பெருமாள் முதலில் உச்சோஷணம் பேசியதை வருணன் கேட்டவன். அவன் ஏன்உடனே முகம்காட்டவில்லை. ராக்ஷஸன் சரணம் புகுந்தவிடத்தில் தேவனாகிய தான் சரணம் புக ஆசை. அதன் சரணத்தில் (வீட்டில்) ராக்ஷஸன் வந்து பெருமாள் காலில் விழுந்தான்; வீட்டுக்காரனாகிய தான் பெருமாளை அங்கே சரணம் புக ஆசை. லங்காராக்ஷஸர்களை அழிப்பதற்கு முன், தன்விரோதி ராக்ஷஸர்களை அழிக்கஆசை. பாதாளத்திற்குச் சென்று அழிக்கும் அம்புடையவர் வேறு யாருளர் ? பெருமாள் கொல்லப் ஸம்ப்ரமம்செய்தாலும்,கொல்லப்போகும் க்ஷணத்திற்கு முன்பு சரணமென்றால்,அந்த ப்ரத்யஸ்த்ரத்தால்பெருமாள் அம்பு



தோற்றுமீளுமென்று உலகத்திற்குக் காட்டவேண்டும். இதை ராவணன் அறிந்து கடைசியிலாவது காலில் விழானா என்று ஆசை. பெருமாள் பராக்ரமம் வெளியாகவேணும். கொல்லும் ஸம்ப்ரமம் வந்தாலென்ன, கால் கட்டிப் பிழைப்போம். பெருமாள் குணத்தையும், வீர்யத்தையும் நான் உலகத்திற்கு ப்ரகாசப்படுத்தி, என்னை ஆக்கின குலக்குழந்தைக்குக் கிஞ்சித்காரம் செய்யவேணும்.ஓர் வைத்தியக்காரன் அறியாமல்என்னைசரண்யன் சரணமடையலாமென்னவும், பெருமாள் எங்கேயோ பார்த்துக் கொண்டு ஓர் அஞ்ஜலிபண்ணார். அதுஎன்னைக்குறித்ததேயாயின், சேஷனாகிற என்னுடைய உயிர் போகும். உடல்போகும் பயம் வந்தாலென்ன, உயிரைக் காப்பாற்றுவோம். பரமாபத்து வந்தாலும் ஒரு க்ஷணத்தில் உடலையும் காப்பாற்றி விடலாம், பெருமாள் என் புளிநத்தில் கிடந்தாலென் பாக்யமே. 'ஸமீக்ஷ்ய ஸேதும் த்ருஷ்ட்வா' என்று என்னோடு விசிஷ்டமான ஸேதுவைப் பார்த்து பாதகம் போகுமே. பெருமாள் த்ரிராத்ரம் கிடந்து தவமிருந்தால்தானே எனக்குள் கட்டும் ஸேதுவுக்கு அந்த மஹிமை வரும். 'ஸமுத்ரசாயீ' பெருமாள். என்னிடம் சயனம் செய்வர். அது ஜலத்தில்- என் புளினத்திற்கு அந்த பாக்யம் வேண்டாவோ. ரஸங்களோடி வருகின்றன. இப்போது நிறுத்துவோம்.

(10) ஸ்ரீவடகரை ஸ்வாமி எம்முடைய ஸ்ரீரங்கராஜஸ்தவ வ்யாக்யாநத்தில் மிக்க ரஸமுடையவர். எம்மிடம் நேரிலெழுந்தருளி மனமாரப் புகழ்ந்தார். வசைமொழிக்கிடம்தரமாட்டோம் என்று ப்ரதிஜ்ஞை உபக்ரமத்தில் பத்திரிகையிலுள்ளது. எம் விஷயமான வசைமொழிகள்தான் அதற்கு அபவாதம். வசைமொழியெல்லாம் எமக்கு அம்ருதம். மேலும் மேலும் சர்ச்சைக்கும் ரஸப்ரகாசனத்திற்கும் இடமாகவும் செவிக்கினிய செஞ்சொல்லாகவுமாகின்றன. இது தென்கரை விருத்தாந்த ரஹஸ்யம். வடகரைக்கும் தென்கரைக்கும் 100-யோஜனை தூரம்.

11. எமக்கு கோபாலன் என்று நாமதேயம் மட்டுமுண்டு. பீதாம்பரத்தோடு கூடியவனென்னும் விசேஷணத்தால் அந்த பகவந்நாமத்தை எம்மிடம் அந்வர்த்தகம் செய்கிறார்கள். பீதாம்பரோபந்யாஸம் இவரதே. எம் பொருளுரைகளை எடுத்து அநுவதித்தல்லவோ இவர்கள் தோஷம் காட்டவேணும். இவர்கள் அம்பரபண்டிதர்கள்.

12. 'மே' என் அபிமதம், என் புத்தியாலே. 'ஸஹ்ய ஸம்ஸ்தாநக ஹாதா' என்றவிடத்தில் ஸஹ்ய ஹாதா என்று சேர்த்து அந்வயம் செய்யாத ஈடு இங்கே அவ்விடத்திற்போல் 'என் அபிமதத்தால்' என்று திருவுள்ளம் கொண்டிருக்கலாம். 'இப்படி என் அபிமதம்' என்ற பேச்சு 'ஊதி ராமோ மே கிம் கர்த்தவ்யா' என்பதோடு மிக அழகாகப் பொருந்தும். வாக்யத்தில் பின்னுள்ளது என் அபிமதம் என்றால் க்ரமம் அப்படியே இருக்கும்.

(13) முன்னுள்ளோர் சரணாகதி என்று பணித்ததாகப் பேச்சு, அப்படி ஓர் நிர்மானப் பேச்சில்லை. நிர்மானமென்றால் சர்ச்சை யிருக்கும். ஆபாதப்ரதீதியைக்கொண்டு அநுவாதமும் நிஷேதமுமன்றி இது உபதேசத்திற்குரிய பொருள் அன்று. என்ன தத்துவத்தில் சேர்ந்தது. ப்ராப்திரஹிதமான அந்யார்த்த தர்சநம் ஸாதகமாகாதென்பர் சாஸ்த்ரஜ்ஞர். பாதிதமான பொருளில் தாத்பர்யம் கொள்ளாமல் மிக ரஸமாய்ப் பொருள் கொள்ளலாம். இந்த ச்லோகம் எல்லோர்க்கும் பொது. யார் கேட்டாலும் பதில் சொல்லவேண்டும். பதில் சொல்ல முடியவில்லை, பெரியோருடைய ஏதோ பேச்சை எங்கோ காண்கிறோம், நீர் ஆக்ஷேபிக்கக்கூடாதென்றால், இவர் உபஹாஸ்யராவதோடு பெரியோரையும் அவர்கள் திரஸ்கரிக்க இடம் கொடுக்கும். இவர் சொல்லும் அநுவாதம்போன்ற பேச்சு இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் உண்டு. 'தவிஷ்யதஃ வரிஷ்டிஃ ஜிஹ்வாவலிதா' என்பதை நினைவில் வைத்து ஸ்பஷ்டவாக்யம் நியதமாயிருக்கும் இடங்களில் வ்யாமோஹம் வராமல் பொருள் கொண்டு, பிறர் பழிப்பிலிருந்து பெரியோர் ஸ்ரீஸூக்திகளைக் காப்பாற்றவேணும். அஞ்ஜலியைக்கொண்டும், விபீஷணன் சரண வார்த்தையைக் கொண்டும் ஆபாதப்ரதீதிஸித்தத்தை அநுவதித்தால் வ்யாஹதமாகாது. சரணாகதி அன்று என்ற பேச்சைக் காண்கிறோம். இந்த ச்லோகத்திற்கென்றே உரைக்கப்பட்ட பொருளை, வேறு இடத்தில்



வேறு விஷயத்தைப்பற்றிப் பேசியதைக்கொண்டு இதை மாற்றக்கூடுமோ? எப்பொழுது சரணாகதி. இந்தப் பேச்சில் சரணாகதி என்று ஸ்ரீஸூக்தியுளதோ? யாரேனும் அப்படிச் சொல்ல முடியுமோ? அஞ்ஜலிக்ஷணமன்று இந்த ச்லோகம். இங்கே யார் நிணவிபாகம் செய்தார். அஞ்ஜலி பண்ணும் க்ஷணத்தில் சரணாகதி முடியவேணும். உத்தரக்ஷணத்தில் முகம் காட்டாததற்கு உடனே தண்டபயம் நினைப்பதற்கு என்னவிரோதம். ஏகக்ஷணம் என்று எங்கே உளது: மூன்று நாள் சரணாகதியோ. இன்னக்ஷணத்தில் சரணாகதியென்றாவது எது சரணாகதி என்றாவது ஸ்ரீஸூக்தியுண்டோ? சரணாகதி எப்போது நின்றது. ஈடு முதலிய ஸ்ரீஸூக்திகளால் இந்த ச்லோககாலத்தில் சரணாகதி இல்லை என்பது ஸ்பஷ்டம். சரணாகதி பலிக்கவேண்டியது உடன் க்ஷணத்திலல்லவோ. பலிக்காதது நிச்சயம். தண்டபயநியோகத்தை நினைக்க என்ன தடையுளது. இந்த ச்லோகவ்யாக்யானத்திற்கு ஒரு ஸ்ரீஸூக்தியோடும் விரோதமில்லை. ஏகக்ஷணமான ஓர் அநுஷ்டானம். பலம் ஸத்ய: வரவேணும். தீர்ந்தது சரணாகதி. பயத்தைக் காட்ட என்ன தடை. பின்பு காட்டவில்லையோ. எந்த க்ஷணத்தில் காட்டலாம் என்பதற்கு இவரா பெருமாளுக்கு விதாயகர். மூன்று நாள் பொறுத்துத்தான் கொல்ல யத்னம் செய்யவேண்டும் என்கிறார். வாலியைக் கொல்ல எத்தனை காலம் கிடந்தார். எத்தனைநாள் அவகாசம் கொடுத்தார். ஈச்வரதந்த்ரத்தையும், ராஜ்யநீதியையும் யார் அறிவார்? ஷாடாநாயோஃ ஹ்ராஸஹாஃ ஸம்ஸாராஃஹ்ராகதநா ஊவ- நம்பெரியோர்கள் ஏதோ அநுவாதப் பேச்சு குத்ரசித் பேசியிருந்தால் அதற்கு ருஷியைக் கட்டுப்படுத்த முடியுமோ. இவர் கருத்தை தஞ்சம் என்று காட்டுகிறாரோ, அதற்கெல்லாம் ஸ்வரஸதாத்பர்யத்தை நிரூபிப்போம். எத்தனையோ இடங்களில் அப்படித் தாத்பர்யம் கொண்டு ஸ்ரீஸூக்திகளை அவ்யாஹதமாக்கவேண்டியிருக்கும். இது வேதம் முதலிய ப்ரமாணங்களுக்கும் துல்யம்.

(14) ஆழ்வார் பேச்சாக இதை ஈடு பேசுகிறது. பாசுரத்தில் ஆழ்வார் பேச்சின் தாத்பர்யம். ஆழ்வார் இதை நினைத்த

தாகப் பேசியதாக எடுத்தது இவர் பக்ஷத்தைக் கொல்லும்' பெருமாள் மரணப்பேச்சை ஆழ்வார் ஸ்வப்நத்தில் தம் வாக்காலும் அநுவாதம் செய்யார். ஸாகரஸ்தானமாக ஆழ்வாரின் மரணமென்றால், ஆழ்வார் புத்தியினால் தமக்கு எது மரணதுல்யமோ அதைக்கொள்ளவேணும். 'அஞ்ஜலி' என்றால் ஆழ்வார் தம் முடிவாக நினைப்பர். அஞ்ஜலி பண்ணி உம்மை முடிக்கட்டுமா நீர் உம்முள்ளத்துக்குள் இறங்கியிருக்க வழிவிடுகிறீரா என்று பெருமாள் பேசுவதாக ஆழ்வார் திருவுள்ளம். இதனிலும் அழகுண்டோ. 'உயிர் காத்தாட்செய்மின்' என்றல்லவோ ஆழ்வார் பேச்சின் வழி. ஸாகரத்தை மரணபயத்தைக் கொண்டு மிரட்டல்; மரணஸ்தானத்தில் அஞ்ஜலியைப் பேசி ஆழ்வாரைப் பயமுறுத்துகிறதாக ஆழ்வார் பேச்சு. எத்தனை கேட்டாலும் பதில் சொல்ல ஸஜ்ஜம்.

---


ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய
க்ரந்தங்கள்
எல்லாம் கிடைக்குமிடம்:—

டி. டி. கோபாலாசாரியர்,
272, பைக்கிராப்ஸ்ட் ரோட்,
ராயப்பேட்டை, சென்னை.




உன் மஹிமையிருக்குமூரிலேயே வேதாந்தங்கள் அணுகக் கூடவில்லை. வேதாந்தங்களுக்கு உன்னுடைய மஹிமை வைதேசிகம் என்பதால் கைமுத்யத்தால், வேதாந்ததேசிகனுக்கும் அவன் பெருமை வைதேசிகமென்று ஸித்திக்கிறது. ஒருவர் ப்ரபாவம் அவருக்கு ஸமீபத்திலிருந்தால் தெரியலாம்; ஒரே ஊரிலிருந்தாலும் தெரியலாம். ஸாமீப்யம் அல்லது ஸாலோக்யமாவது இருக்கவேணும். ஸாலோக்யமேயில்லை. ஸாமீப்யத்திற்காசையேது. வேதங்கள் அநந்தங்களென்பர். என் போன்றவர்களுக்கு சில எழுத்துக்கள் கூட்டத் தான் தெரியும். என் போன்றவர் எழுத்துக்களுக்குள் உன் மஹிமை அளவடங்குமோ? வர்ணம் என்பது எழுத்தையும் சொல்லும், ஸ்தோத்ரத்தையும் சொல்லும். (வர்ண்யதே அநேந - இதனால் வர்ணிக்கப்படுகிறது) எங்கள் எழுத்துக்களிலடங்காது. நாங்கள் வெட்கத்தைவிட்டு கோணமாணவென்று ஸ்தோத்ரங்களை (வர்ணங்களால் வர்ணநங்களைச்) செய்தாலும் உன் மஹிமை அதிலடங்குமோ? துதிப்பாடலுக்கும் வர்ணமென்று பெயர். 'உபாத்தவர்ணே சரிதே பிநாகிந:' என்று குமாரஸம்பவம். இந்த ச்லோகத்தில் 'கர்த்தும் ததீய மஹிமஸ்துதிம்' என்ற ஆளவந்தார் ச்லோக வார்த்தை ஸ்வாமி நெஞ்சிலோடுகிறது. துதியென்றால் மஹிமையின் துதியாகும். மஹிமையை அறியாமல் எப்படித் துதி செய்கிறது. 'யதாவத் வர்ணநே தஸ்ய கிமுதாந்யே மிதம் பசா:' என்று யாதவாப்யுதயத்தில் 'வேதங்களே பாடிப்பாடி ஓரோர் குணத்தின் ஏகதேசத்திலே சோர்வடையும் விஷயத்தில் மிதஜ்ஞானவர் யதாவத்தாய் உள்ளபடி வர்ணிப்பதில் ஸமர்த்தராகாரென்பதற்குக் கேட்கவேணுமோ' என்று ஸாதித்ததை நினைக்கவேணும். உள்ளபடி வர்ணிப்பது வர்ணமென்னும் துதி. அங்கே கைமுத்யம் ஸ்பஷ்டமாக்கப்பட்டது; இங்கே கைமுத்யம் வ்யஞ்ஜிதம். என் அறியாமையை நான் நன்கறிந்தும் திடீரென்று பலாத்காரமாய், உன் குணங்கள் உன் சிசுவாகிய நான் ஊனமயாயிருப்பதை ஸஹிக்காமல் என் மௌனத்தின்மீது கோபித்து என் வாயைத் திறந்துவிட்டு என்னைப் பேச்சைக் கொடுக்கும் வியாபாரத்தில் தள்ளிவிடுகின்றன. ஸஹஸைவ - அதிவேகமாகவே - பலாத்காரமாகவே. ஒன்றுமறியேனென்றீர், மௌனத்தைக் காணோமே, வாய் திறக்கிறீரே, இதென்ன ஸாஹஸம் என்பாயோ, அம்மா

இது உன் குணங்களின் ஸாஹஸம், அவற்றின் பலாத்காரம்; என் ஸாஹஸமல்ல. உன் குணங்கள் உன் குழந்தையாகிய என் மௌனத்தைக் கோபிக்கின்றன. பெருமாள் குணங்கள் மௌனத்தை நிர்ப்பந்திக்கும். அவர் ஆநந்த குணத்தைப்பேசி ஓய்ந்து வாயை மூடிக்கொண்டு சும்மாயிருப்பதே அழகு என்று வேதம் நிவ்ருத்தியடைந்தது. 'மூகலாயம் நிலில்யே' 'ஊமையாக லயமடைந்தது' என்று ஸ்ரீபட்டர் ஸாதித்தார். பெருமாள் குணங்கள் அவருடைய ஐச்வர்யப் பெருமையால் மௌனத்தையும், ஊமைத் தன்மையையும் ஸஹிக்கும்; பேசாமலும் செய்யும்; தாயாகிய உன்னுடைய குணங்களோ குழந்தை வாயை மூடி ஊமையாயிருப்பதை ஸஹிக்காது; மௌனத்தைக் கோபித்து வாயை உடனே திறந்துவிடும். வேறொன்றையும் உன் குணங்கள் கோபிக்கமாட்டா. மௌனத்தை மட்டும் கோபிக்கும். பெருமாள் குணங்களுக்கும் உன் குணங்களுக்கும் இந்த வாசியுண்டு. என்ன குணங்கள்? முன் ச்லோகத்தில் மூன்று சொன்னேன். அவையென்ன? க்ஷமை, கருணை, கோதை என்ற திருநாமத்திற்கேற்ற 'வாக்கைத் தானம் செய்வதென்னும் குணம்'. என்ன பிதற்றினாலென்ன? சொற்குற்றம், பொருள் குற்றம், எத்தனையிருந்தாலுமென்ன? உன் பொறுமை அதையெல்லாம் பொறுக்காதோ? ஏனஞ்சவேணும்? உன்னைத் துதி செய்தாலல்லது நான் தரிக்க முடியாத என் ஆர்த்தியைக் கண்டும் உன் கருணை என்னைக் கைவிடுமோ? 'கோதா - வாக்கையளிப்பவள்' என்னும் உன் திருநாமம் என் ஊமைத்தனத்தை கோபிக்காதோ? நான் உன்னைச் சரணம் புகுந்தும் ஊமையாயிருந்தால் அதை உன் திருநாமம் கோபியாதோ? இரண்டுக்கும் பரஸ்பரம் சத்ருத்வமில்லையோ? வாக்கைக் கொடுக்கும் குணம் கொள்வாரில்லாமற்போனால் கானகநிலவு போல் வீணாகாதோ? 'முகரயந்தி' என்பதிலும் மிக்க ரஸமுண்டு. 'முகம்' என்பது வாய்க்குப் பெயர். லக்ஷணையாக வாய்ப்பேச்சை, வாக்கைச் சொல்லும். முகத்தைக் கொடுப்பது முகரம். முகம்ராதி. ராதி என்பதற்கு கொடுக்கிறது என்று பொருள். வாய்ப்பேச்சை, வாக்கை, துதியைக் கொடுப்பது முகரம்— வாயைக் கொடுக்கச் செய்கிறது என்று மொத்தப் பொருள். என் வாயைக் கொடுக்கச் செய்தால் தானே, உனக்கு கோதா என்னும் திருநாமம் நிலைக்கும். பொருளாவது



துதிக்கையில் 'உம்முடைய வாத்ஸல்யமே என்னை முகரனாகச் செய்கிறது' என்று ஸாதித்த ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் இதை விஸ்தரிக்கிறோம். (2)

[illegible]

த்வத்ச்ரேயஸ: ச்ரணயோரம்ருதாயமானாம்
துல்யாம் த்வதீயமணிநூபுரசிஞ்ஜிதாநாம் ।
கோதே த்வமேவ ஜநநி த்வதபிஷ்டவார்ஹாம்
வாசம் ப்ரஸந்நமதுராம் மம ஸம்விதேஹி ॥ (3)

உன் காந்தனுடைய செவிகளுக்கு அம்ருதம் போன்றதாயிருப்பதும், உன்னுடைய மணிச்சிலம்பின்னோசைக்கு துல்யமானதும், உன்னை நன்கு துதிக்க யோக்யமுமான ப்ரஸந்ந மதுர வாக்கைத் தாயாகிய கோதையே நீயே எனக்கு அமைத்தருளவேணும்.

தாத்பர்யம்— (1) நீர் சரணம் புகுகிறதாகவும், நீர் என் மஹிமையை அறியவும் பாடவும் அசக்தர் என்றும் பேசுகிறீர். ஆனால் கவி பாடிய இரண்டு ச்லோகங்களும் அழகியதே. இப்படியே நீர் பாடலாம். (2) சரணம் புகுகிறேனென்கிறீர். வாய் திறக்கப்படுகிறது என்கிறீர். முழு வாயால் 'கவிதா சக்தி வேணும் என்று அர்த்திக்கமாட்டேனென்கிறீரே. திறந்த வாயால் வேண்டியதை நன்றாய்ச் சொல்லிக் கேளும் — வெட்கப்படாதேயும். இப்படிச் சொன்னதும், உன் மணிச் சிலம்பினொலியைப்போல் உன் நாயகன் செவிகளுக்கு அமிர்தத்தை வார்க்கும் இனிய கவிகளையல்லவோ நான் ஆசைப்படுவது. அப்படிக்கினிய கவிகள் எனக்கு நீ கொடாமல் போனால் ஸ்வயமாய் எனக்கு அவை சக்யமல்ல. தாயாகிய உன்னிடமெனக்கு என்ன வெட்கம். வாய் விட்டு நன்றாய் யாசிக்கிறேன்' என்றார். ச்ருதிகளுக்கெட்டாது உன் மஹிமையென்றார் முன்பு. இங்கே உன் நாயகன் சுருதிகளுக்கு மதுரமாய் எட்டவேணும் என்கிறார். உன் நாயகன் எத்தகையர் தெரியுமோ? எல்லாக் கவிகளும் அவரிடம் தாங்கள் காவ்யங்களைப் பாடி அரங்கேற்றிப் பரிசு பெறவேணும். எல்லாக் கவிகளும் அவரிடம் பாடி இறைப் பறை பெற்றால் தான் உலகம் அவர்கள் கவிகளை மானிக்கும். இவ் விஷய

மான காவ்யமாயின், அதன் இனிப்பு குறையவிருந்தாலும் குறை சொல்லமாட்டார். ப்ரிய சாந்தையும் உத்தம கவியுமான உன் விஷயமான கவியானதால், அமிர்தமாயிருந்தாலொழிய அபிநந்தனம் செய்யார். ப்ரதிதினமும் தன் முன்பு அரங்கேற்றப் படிக்கப்படும் காவ்யங்களைக் கேட்டுக்கேட்டு காவ்ய குண தோஷங்களை பூர்ணமாய் பரீக்ஷிக்கத் தெரிந்த செவிகளையுடையவர் அரங்கராஜர். அவருக்கு பஹுகுணரமணீயமென்று பஹுமானிக்கத் தக்கதாக வேணும். அமிர்தம் போல இனிப்பென்றதோடு திருப்தியில்லை. மற்றொருபமானமும் செய்கிறார். அந்த உவமையையும் கோதை ஸம்பந்தமாகவே எடுக்கிறார். உன்னுடையது உன்னுடையது என்று இங்கே பலதரம் பேசுகிறார்.

உனக்கு மிகப்ரியன், உன்னுடைய மணிச்சிலம்புகளினொலிகள், த்வமேவ (நீயே, நீயாகவே). உன்னை நன்கு துதிக்க அர்ஹமான, என்றே திரும்பவும் திரும்பவும் பேசுகிறார். எல்லாம் உனதாகவேயிருக்கவேணும்; என்னதென்பதே கூடாது. உன்னுடைய மணிச்சிலம்பின் ஓசை காதில் விழுவதை அவர் எல்லையில்லாத ஆவலுடன் ப்ரதீக்ஷித்துக்கொண்டிருப்பர். அதனிலும் இனியது அவர் செவிக்குக் கிடையாது. உன் வரவை அல்லவோ, அது முன்பே காட்டும். 'மணியோசை வரும் முன்னே, நீ கஜகாமினியாய் ஆடியாடி நடந்துவருவதையல்லவோ அவ்வோசை காட்டும். விக்ரமோர்வசீயம் என்னும் நாடகத்தில் விக்ரமன் 'ஹம்ஸா நூபுரசப்தமாத்ரமபிமே காந்தாச்ருதௌ பாதயேத்' (உர்வசீ வருவாளோ, அவள் சிலம்பின் ஓசையை மட்டும் என் காதில் விழச்செய்வாளோ, பின்னாலே மெள்ள வந்து தன் தாமரைக்கைகளால் என் கண்களைப் பொத்துவாளோ) என்று தன் ஆசையைப் பேசின ச்லோகம் இங்கே கவி நெஞ்சிலோடுகிறது. கோதையின் அடிச்சிலம்பின் ஓசையைப் போன்ற மதுரவாக்கை யாசிக்கிறார். சேஷனாகிய தம் வாக்குக்கு அவள் திருவடி ஸம்பந்தமான சிலம்போசையின் உவமையைச் சொல்லுவதுதானழகு. அவள் 'வக்த்ராரவிந்த மகரந்த துல்யமான' வாக்கைக் கேட்கவில்லையென்பதைக் கவனிக்கவேணும். "ஹொாஷி கவயே ஜநநி வாசம் ஸம்வியேஹி" வாக்கைக் கொடுப்பதையே ஸ்வபாவமாக உடைய நீ (கோதை) நீயாகவே ஸ்வயமாய்க் கொடுக்கவேணும். தாதாக்கள் நிர்ப்பந்தித்தால் கொடுப்



பவரல்லரே. தம்பேறாகத் தாமாகவேதான் கொடுப்பர். 'ஜநநி' தாயே, என்னைப் பெற்றவளே, என்னைப் பெற்ற நீ என் துதியையும் நீயே பெறுவாயாக. (பிறக்கச்செய்வாய்). பெற்ற ஜநநியைத்தானே "பவதி பிக்ஷாம் தேஹி" என்று குழந்தைகள் யாசிப்பர். 'பிக்ஷாம் தேஹி' என்பதுபோல் சப்தம் இருக்க, 'ஸம்வியேஹி' என்று ஸாதித்தார். நான் உன்னை யாசிக்க வெட்கப்படவில்லை. பெற்றவள்தானே என்போன்ற ப்ரஹ்மசாரிக்குப் பிச்சை போடவேணும். உன் நாயகனுக்கு செவிக்கு கொடுக்கவல்லவோ நான் உன்னை யாசிக்கிறேன். நீ எனக்குக் கொடுக்கும் வாக்குப்பிச்சை உன் நாதன் செவிகளுக்கு அமிர்தமாகும். க்ருஷ்ணகர்ணாம்ருதம், ராமகர்ணாம்ருதம் என்ற பகவத் ஸ்தோத்ரங்களைக்காட்டிலும் கோதை கர்ணாம்ருதமே அவர் செவிக்கு அத்யந்த ஆனந்தத்தைப் பயக்கும். 'நானே வாக்கைக் கொடுத்து என்னைத் துதிக்கச்செய்து அதை நானே கேட்டு மகிழலாமோ" என்று நீ கேட்பாயே? நீ எனக்கு வாக்கைக் கொடுத்து உன்னைப்பற்றிப் பாடச்செய்தால் போதும்; அப்பாட்டை நீ காது கொடுத்துக் கேட்கவேண்டாம். உன் நாயகன் கேட்பதே போதும். த்வதபிஷ்டவார்ஹாம். கவிச்சக்ரவர்த்தினியான உன்னை நன்கு இனியப் பாடயோக்யமான வாக்கு உன் சவிதயே, இங்கே 'அபிஷ்டவம்' என்னும் பதத்தைக் கவனிக்கவேணும். கோபாலபாலனை ப்ரஹ்மதேவன் வத்ஸாபஹாரப்ரகரணமுடிவில் ப்ரஹ்மஸ்துதி என்று பெயர் பெற்ற அத்புதஸ்தோத்ரத்தால் துதி செய்து முடிந்ததும் 'இத்யபிஷ்டூய பூமானம் த்ரி: பரிக்ரம்ய பாதயோ:' (இப்படி எல்லையில்லாப் பெருமையும் ஸுகமுமான கண்ணனை நன்கு துதித்து மூன்று ப்ரதக்ஷிணங்கள் செய்து திருவடிகளில் விழுந்தார்) என்று அவர் மகிழ்ந்து வர்ணிப்பதில் நான்கு முகங்களாலும் ஸர்வகாலமும் நான்கு வேதங்களையும் அத்யயனாத்யாபனம் செய்யும் ஸரஸ்வதீகாந்தரான ப்ரஹ்மதேவன் ஸ்துதியை 'அபிஷ்டவம்' என்று பேசினார். அதுபோன்ற ஸ்தவத்தில் ஆசை. திருவேங்கடமுடையான் தயாவிஷயத்திலும் 'அபிஷ்டௌமி நிரஞ்ஜநாம்' என்று இப்படித் துதிக்க ஆசையைக்காட்டினார். ஆளவந்தார் சதுச்லோகியும் இப்படி அபிஷ்டவமாக அமைந்ததென்பதை 'அபிஷ்டௌதி ஸ்துத்யாம்' என்று அதை வர்ணித்ததால் காட்டினார். எந்த ரீதியான வாக்கு வேணும்? ஸமாஸங்கள் நிறைந்த ஓஜஸ், அக்ஷராடம்பரம் (கடாடோபம்) என்

னும் கௌடரீதி வேணுமா ? மாதுர்யஸௌகுமார்யங்களோடு
கூடிய பாஞ்சாலீரீதி வேணுமா ? தோஷலேசங்களாலும் ஸ்பர்
சிக்கப்படாததும் ஸமக்ரகுண கும்பிதமும் வீணையின் ஸ்வரத்
தின் ஸௌபாக்யத்தையுடையதும் (விபஞ்சீஸ்வர ஸௌபாக்யை
யான) வைதர்பரீதி வேணுமா ? உமக்கு எல்லாம் பிடிக்கும்
என்று நீரே ஸங்கல்பஸூர்யோதயத்தில் “ கௌடவைதர்ப்ப
பாஞ்சாலமாலாகாராம் ஸரஸ்வதீம் । யஸ்ய நித்யம் ப்ரசம்ஸந்தி
ஸந்தஸ்ஸௌரபவேதின: ”என்று பாடியிருக்கிறீரே. கவிஸார்வ
பௌமரான காளிதாஸருக்கு கௌடரீதி வராது. உமக்கு
அதுவும் வச்யம். உமக்கு இத்தனை ரீதியும் வச்யமென்றீரே
என்னை ஏன் யாசிக்கவேணும் ? உன்னுடைய அபீஷ்டவத்திற்கு
அர்ஹமான வாக்கு எனக்கில்லை. ஆகையாலுன்னை நான் யாசி
த்துத் தானம் வாங்கித்தான் தீரவேணும். மேல்மேல் கோடி
சொல்வதில் நீர் சளைக்கமாட்டீர். வேண்டிய வாக்கைக் கேளும்.
அம்மா கௌடரீதி வேண்டாம். ஸமக்ரகுணோபேதமான
வைதர்ப்பரீதியையும், மாதுர்ய ஸௌகுமார்யங்களோடு கூடிய
பாஞ்சாலீரீதியையும் அளிக்கவேணும். விபஞ்சீ (வீணை) ஸ்வரம்
போன்ற இனிப்புடையது வைதர்பீ என்பர். யாழிலுமினிக்
கும் உன் சிலம்பின் ஓசை. கோதை சிலம்பின் ஓசையை
போன்றஎன்றதால் உயர்ந்த வைதர்ப்பரீதியைக்கேட்டதாயிற்று
ப்ரஸந்ந மதுரமான வாக்கை அளிக்கப் பிரார்த்திக்கிறார். மதுரம்
என்பது பாஞ்சாலீரீதியைஅஸாதாரணமாகக்காட்டும்.ப்ரஸாதம்
முதலிய சிறந்த எல்லாக் குணங்களையுமுடையது வைதர்ப்பீரீதி
‘ப்ரஸந்ந’ என்பதால் அந்த ரீதியையும் கேட்கிறார். இந்த ரீதி
களால் கந்தங் கமழும் மாலைபோன்ற ஸரஸ்வதியை யாசிக்கி
றேன். உன் பாமாலை போன்ற இனிப்பும் ஸௌரப்யமுமிருக்க
வேணும். வாக்கின் பரிமளத்தை உன்னிடம் யாசிக்கிறேன்
புஷ்பம் போன்ற வாக்கு வேணும். பெருமாளுக்கு வாக்கு மாலை
ஸமர்ப்பிக்க உன்னிடம் தானே யாசிக்கவேணும். நீயே விதானம்
செய்யவேணும். விதானம் மட்டும் போதாது. நன்றாய் வித
னம் செய்யவேணும் (அமைக்கவேணும்). ஸம்விதானம் செய்
விதர்ப்பாதிபதியின் புத்திரி ருக்மிணி;க்ருஷ்ணனுக்கு பரமபித்
மானவன் பாஞ்சாலீ, த்ரௌபதி; அவள்ருக்மிணிக்கு ப்ராணஸ
மா ஸகியாவாள். வைதர்ப்பீ, பாஞ்சாலீ என்னும் திருநாம
ங்கள் பெருமாளுக்கும் கோதைக்கும் அமிர்தமாகும்.



சு. 59, எம் வ்யாக்யானம் ஸம்ஸ்க்ருதபாஷை. தமிழ்ப்பதத்
தைச் சொல்லி அதன் பொருளைக் காட்ட அத்தனை ஔசித்ய
மில்லை.

90. ‘வபுர்ஜாதபாரிஜாதஸ்ய’ ‘திருமேனியாகிய பாரிஜாத
வ்ருக்ஷத்தினுடைய’ என்று ஒரு பதமாக முன்பு உரையிலிருப்
பதை முதலில் ஒரு பொருளாகக் கொள்ளுவது எமக்கு இஷ்
டமே. அதன்பேரில் வரும் ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்க தனிப்
பதங்களாகவும் ஓர் அந்வயம் காட்டுவது அழகு. என்ன ஆக்ஷே
பம் ? ஒரு பதமானால் ஸமயம், மது, விகாஸம், சுளகம் எல்லாம்
நித்யமான யுவத்வத்தோடு அந்வயிக்கும். நித்யமான யுவத்வத்
திற்கு ப்ரதமகுஸுமோல்லாஸஸமயம் என்று பேசுவது வ்யாஹ
தோக்தியாகும். திருமேனியே மந்தாரமாய்விட்டபடியால் அப்
படி விரோதம் வருகிறது. ‘வபு:’ என்று பிரித்து அந்வயித்தால்
ஸமயம், மது முதலியது அதோடு அந்வயிக்கும். ‘ப்ரதமகுஸு
மோல்லாஸம்’ என்பது உபமானமான மந்தாரத்தோடு அந்வ
யிப்பதால், நித்யயுவத்வமுடையது திருமேனி என்கிற தத்வத்
திற்கு விரோதம் வராது. திருமேனி பாரிஜாதத்தின் வஸந்த
ப்ராரம்பம்போன்றது. வஸந்தஸ்ய ஸ்ரீ கோதா ஸம்பந்தஸ்ய ச
என்பது பலிதார்த்தம். திருமேனியே பிராட்டிமாருக்கு ரஸிக
மான தேன். மதுமாஸமானது மதுவுமாயிற்றென்றும் வைசித்
ரியம். ‘ரஸானாம் ஸௌரபம்’ என்றதைத் திருமேனி
விஷயமாகவும் ஒருவாறு நினைக்க. அழகெனும் புஷ்பமாலையில்
மலர்ச்சியாகும் திருமேனி. ராஸிக்யம் என்னும் தேனின் (அம்
ருதத்தின்) ஓர் உள்ளங்கை (சுருங்காய்)அள்ளிக்குடிக்கலாம்போல்.
இதற்கு நாமுரைத்த பொருளின் ரஸம் இவ்வரஸிகர்களுக்கு
விள்ளவில்லை. ‘ரஸிகதா’ என்னும் அம்ருதத்தை இவர்களுக்குப்
புகட்டின பிறகல்லவோ, இவர்களுக்குத் திருமேனிரஸத்தை
ரஸிக்கச் சக்தி உண்டாகும். எம் க்ரந்தத்தில் வர்ஷிக்கப்பட்டி
ருக்கும் ஸர்வரஸன்விஷயமான ரஸங்கள் இவர்களுக்குப் பிடிக்
காத காரணம் இவர்களுக்கு ரஸிகதையில்லாததே. முதலில்
ரஸிகதையை இவர்களுக்குப் புகட்டிப் பிறகு இவர்களுக்கு ரஸங்
காட்டவேணும். பெருமாள் திருமேனியின் ரஸத்தை
ஆஸ்வாதனம் செய்யும் யோக்யதையை [illegible] தை

மையே அள்ளிக்கொடுத்துப் பானம் செய்விக்கிறது. கடைசிப் பாதம் நிகமனம். முதல் பாதத்தில் மந்தாரகுஸுமஸௌரபம், இரண்டாவதில் தேவிமாரை மயங்கச்செய்யும் ஸௌபாக்யம். முன்பாதி இரண்டையும் சேர்த்தது. மூன்றாவதில் ஸௌரப்யமும், ஸௌபாக்யமும் சேர்ந்தது. இக்காரணங்களால் பெருமாள் யௌவநம் நித்யமாக இரண்டையும் சேர்த்தே அநுபவகோசரமாக்குகிறது. இப்படிப் பொருளுரைப்பதில் உபக்ரமம் உபஸம்ஹாரத்தால் பாதிதமாகாமலிருக்கும். '[illegible]' என்கிற சுலோகத்தில் கடைசிப் பாதத்தில் '[illegible]' என்று நிகமநம்போல. '[illegible]' என்று கவலைப்பட இடமில்லாமல் போக்த்ருத்வ ஸாமர்த்யத்தைக் கொடுத்து போக்தாவை உண்டுபண்ணுகிற சாதுர்யம் '[illegible]' என்று காட்டப்படுகிறது. ராஸிக்யத்தைப் புகட்டாவிடில் கானல் நிலவாய்விடுமே.

சு. 85. "[illegible]" என்று தனியாகவே காட்டியிருக்கிறது.

சு. 11. ப. 17- 18. [illegible] — பஞ்சம்யந்தமான ஒரே பதமென்பது வ்யாக்யாநத்தில் ஸ்பஷ்டம். ஸ்வயம் க்ரஹாச்லேஷத்தில் ஸ்தநமுத்ரை எங்கே விழும்? மார்பும் மார்புந்தானே அணையும். அச்சுப் பிசாசுகூட இங்கே ரஸமுத்ரையில் ஆசைப்பட்டு, 'முத்ரிதோ ரஸ:' என்று போட்டுவிட்டது. இவர்கள் நெஞ்சில் ரஸமென்பது எப்பொழுது முத்ரிதமாகுமோ? இந்தத் தலைமுறையில் இவர்களுக்கு ரஸ்தடஸ்ததை நீங்குவது ஸம்சயமே.

சு. 65. '[illegible]' என்று அவசமாக விழுந்திருக்கும் பாடத்தில் அழகிற்குக் குறையில்லை. '[illegible]' என்கிற தேவநாயகபஞ்சாசத் ச்லோகத்திலிருந்து கவலை. '[illegible]' என்கிறபாடந்தான் அழகு. 1913புஸ்தகத்தில் அதைக் காண்கிறோம். தமிழ்[illegible]மூலத்தில் அதே பாடம். மூலத்தின் அழகு தெரியாமல் [illegible]ம் மாறியிருக்கிறது. 'பூமிநிம்னம்' என்பது 'பூமி[illegible] பூம்யா: நிம்னம். 'வெட்டப்படாத [illegible]



யம் ஸித்தமான) பூமிப்பள்ளம்'. குளமாயின் வெட்டப்பட்டிருக்குமே என்கிற சங்கை ப்ரஸக்தம். அந்த சங்கையைப் போக்குவது உசிதம், அவச்யம். ப்ரஸக்தத்திற்கு ப்ரதிஷேதமழகு. பெருமாள் திருமேனியின் மஹிமை தெரிந்து, அது க்ருத்ரிமமோ என்கிற சங்கை உண்டாக ப்ரஸக்தியில்லை. மஹிமை தெரிந்தவராயின் அவர்களுக்கு இந்த சங்கை உதிக்காது. தெரியாவிடிலும் உதிக்காது. தடாகமாக வர்ணித்ததனால், புத்திக்கு வந்த க்ருத்ரிமத்வசங்கையைப் போக்குவதுதான் அபேக்ஷிதம். அபேக்ஷிதத்தைச் சொல்லாமல், அநபேக்ஷிதத்தைப் பேசுவது தோஷம். 'அபூம' என்பதற்கும் 'பெரிதல்லாத' என்று ஓர்பொருளும் கொள்ளலாம். குளமானால் சின்ன விமானத்திற்குள் அடங்கி இராது. குளம் கொஞ்சம் பெரிதாகவேயிருக்கும். பெரிதல்லாத ஓர் விசித்ரமான ஸரஸ் என்று வ்யதிரேகமும் திருவுள்ளம். ஹேதுக்ரியாபதம் ஸுலபமாகக் கிடைக்கும். க்ருபையின் அலைகளுள்ள குளம் சீதளமாயும் ப்ரஸந்நமாயுமிருக்கிறதென்று ஹேட்டர் ஸாதிப்பது, துக்கக்கலக்கம் துக்கக்கொதிப்பு என்கிற பக்ஷத்தை பாதிப்பதால், இவர்களுக்கு வரும் கோபம் எம்பேரில் பாய்கிறதோ?

சு. 65. இங்கே உள்ள வைசித்ரியத்தைக் காட்டுவதில் என்ன தோஷம். அழகுக்கும் ரஸத்திற்கும் தடஸ்தவ்ரதம் கொண்டவரிவர். 'பரமபதமே கோவிலுக்குள் எழுந்தருளியிருக்கிறது' என்பதை ஒப்புக்கொள்ளும் நமக்கு இந்த வைசித்ரியத்தால் என்ன தூஷணம் வந்துவிடும்? 'அருள்' என்கிற ப்ரஸித்த ஸமாதானஹேது இரண்டிடத்திலும் ஸமானம்.

சு. 88. இங்கே அநவதாநம் என்பது ஸ்பஷ்டம். லேககப்ரமாதமிருக்கமாட்டாதா?

சு. 86. இங்கே லஹரிவத் என்றே இருக்கட்டும். ஸந்தோஷம். இப்படியே ஸகாரப்ராயமான இந்த சுலோகத்தில் 'ரஸிகதாஸீய[illegible]' என்றவிடத்தில் ஸகாரம் அழகல்லவா?

சு. 98. க்ருபையென்பது அநுக்ரஹேச்சை. ஸ்வார்த்தநிர[illegible]மான உபாசிகீர்ஷை, துக்காபாசிகீர்ஷை. 'பரா[illegible] க்ருபயா[illegible]

ஹேச்சையினால் செய்ய நினைத்து என்று இச்சையைக் காட்டாமலிருக்கமுடியுமோ ? க்ருபை என்பது 'தயாத' எல்லையில்லாத கலப்பில்லாத அழுகையாயிருந்தால்தான் எம் பொருளொட்டாது. இங்கே இவர்கள் வடிக்கட்டின அழுகைப் பொருள் பொருந்துமோ ?

ப. 120. 'நிராஸ:' என்கிறவிடத்தில் தகாரம் சேர்ந்தது அச்சுப்பிழை. 'ஸம்யாநு' என்றவிடத்தில் முன் வாக்யத்திலுள்ள 'வ்ருதாவ:' என்பதின் லிங்கம் நெஞ்சிலோடியிருக்கவேணும்.

சு. 109. இங்கே 'உபயாதீக்ருதஸம்ஜ்ஞ' என்று வ்யாக்யாநம் செய்யப்படவில்லை. 'உபயாதீக்ருதஜ்ஞ' என்று கொண்டுதான் வ்யாக்யாநம். அடுத்த சுலோகம் முதல் பாதத்தில் 'உபயாதீக்ருதஸம்ஜ:' என்பதிலிருந்து அத்ருதயமாகக் கவலை பாய்ந்தது ஸ்பஷ்டம்.

சு. 119. 'நீவி' என்று படித்துப் புருஷோத்தமனுக்கு நித்யமாகப் பெண்ணுடை உடுத்த ஆசைப்பட்டால் உடுத்தட்டும். பாடம் விழுந்தது அவசம். உள்ள பாடத்தை மாற்ற அதிகாரம் இல்லைதான்.

சு. 120. நாகரத்தில் பவுக்கும் மவுக்கும் அச்சுப்பிழை ஸஹஜம். வ்யாக்யாநத்தில் பர்ம என்பதற்குத்தான் ஸ்வர்ணம் என்று பொருளுரைக்கப்பட்டுளது.

ப. 22. சு. 100. இங்கேயும் கருணையைக் கரைபுரண்ட அருதவெள்ளமென்றும், கண்களை நதிகளாகவும், கடாக்ஷலக்ஷணத்தை ப்ரஸங்கசிதமென்றும் வர்ணித்திருப்பதன்மேல் இவர்களுக்கு சிற்றம்போலும். அவலை நினைத்துக்கொண்டு உரலையிடிகிறார்கள். இரு கண்களின் வீக்ஷணலக்ஷதிக்குள்ளது கண்களின் விஷயத்தில் பர்யவஸிக்காதோ ? பர்யவஸிதார்த்தமே காட்டப்பட்டது. ஸாமி காதாரநேத்ரு பதவுரையோடு விச்ராந்தியடையுமிவர்கள் வழியை நாம் கருதுபவரல்லர். 'வீவீஸமாபெ... க, என்று அவலக்ஷதிவழியாகக் கண்கள் வ்யாபரிப்பதைக் காட்டும் தமி... [illegible] ...த்தாத்' என்ற விடத்திலும் லோசனங்க... தெரிய... [illegible] ...பொருளுரை. அங்கே த்... [illegible] ...ப... [illegible]



இருந்தால், ஸ்வாகதிகீ என்றவிடத்தில் இவர்போன்றவர் ப்ரமிக்கலாம். 'கருணாம்ருதம்' என்பதை 'துக்கவிஷம்' என்று விவரித்தால் இவர்கள் எம்மைக் கட்டிக் கொள்ளுவார்கள். சு. 99-ல் நம்பாணநாதராநுபவஸ்மரணத்தை மறக்கமுடியாது. 'நீண்டவப்பெரியவாய கண்கள்'- 'விசாலஸ்தாயத' ஆதாத்ர) ஸாவஷ்டத்ர) என்றும், 'தூயவஷ' 'ஈஷத்து வெண்மையுடையது' என்றும் பேசியதால் கருமையின் ப்ராசுர்யம் ஸித்தம். இவரைப்போன்ற உலக்கைக் கொழுந்துகளான குயுக்திகளுக்குத்தான் இப்படி ஸம்சயம் பிறக்கும்.

சு. 118. 'அக்ருஷ்ணேத்தை' 'உதாவ்ருதன' 'ஸாஸா' என்று இதே சுலோகத்திலேயே பேசியிருப்பதைக் கவனிக்க. ரஸத்தால் எமக்கு அத்யந்த மத்தத்வமுள்ளதே. அத்யந்தத்ருப்தத்வம் இவர்களுக்கே தனிமையில் ஸ்வந்தம்.

ப. 24. 25. 'கருணாமயமான தயை என்றால் என்ன' என்று கேள்வி. 'கருணாஸ்வரூபமான' என்பது பதில். 'ஹாஸெஷகஉயீ' என்கிற கரவ்யப்ரகாச சுலோகத்திலும், 'வீநயம' என்றவிடத்திலும் மயட்டுக்கு ஸ்வரூபப்பொருள் என்று. வ்யாக்யாநங்களைக் கவனிக்க. ஸ்வார்த்தம். ஸ்வாநதிரிக்தம் ஸ்வரூபம். பாஷித ப்ராவணதையான கருணாஸ்வரூபமானதால், பிறரை மயநம் செய்யாள். மயட்டின் பொருள்களைக்கொண்டு 'அப்ராக்ருதமாஷோத்யட' என்று ஓர் வ்யாஸம் பலவருஷங்களுக்கு முன்பெழுதி இரண்டு வருஷங்களுக்கு முன்பு உத்யாநபத்ரிகையில் அச்சிட்டிருப்பதைப் பார்த்துத் தெளிக. டியா ந வாவேநகத்ருத் டியாஸாக (வாஹிதவ்ருவணதாஸாஸ்வெஸாக) சிசுக்களை இதில் என்ன தோஷம். 'தயை தன்னையே கடைந்துகொள்ளுகிறாள்'. எம் ஸம்ஸ்க்ருத வ்யாக்யானத்தில் விஸ்தரித்து இருப்பதைப் பார்த்துத் தெளிக. 'ஸங்மதி' என்பதற்கு 'ஸத்தான புத்தி' என்கிற பொருளை இவரும் எழுதுகிறார். யாருடைய ஸம்மதி (சோபனபுத்தி) என்று [illegible] ஆச்சர்யம். கடையும் தயையின் [illegible] கடாதோ. தயையே பாற்கடலானதால் கடை[illegible] தயைதானே. 'க்ருதக்ருதெத:' 'வரிணாஸ்ரக', [illegible] தாநம் ஸயநகஸாஸ்த. தமரான ஸத்துக்களின் மதி, [illegible]

தயையின் சுபமதி என்று மூன்று யோஜனைகள். இப்படிப் பல அர்த்தங்களைக் கொடுக்கத்தான் 'ஸந்மதி' என்று ஸாதித்தது. 'வேறுருவர்' யாரென்று கேழ்வி- பிறர். பிறரைக் கடையாமல் தன்னையே கடைந்துகொள்வதான தயையின் ஸ்வபாவத்தின் ப்ரதர்சனமழகே. 'தன்னையே கடைகிறாள்' என்ற பொருளில் ஆபிமுக்யமாகக் கிடைத்த பொருள் ஸ்வாரஸ்யத்தைக் காட்ட வேண்டாமோ? 'தன்னையே' என்றால் 'பிறரைக் கடையாள்' என்று அர்த்தஸித்தியைப் பேசலாகாதோ?

ப. 25. '[illegible]'. '[illegible]' என்பதன் பொருளைப் பற்றி ஸம்ஸ்க்ருதவ்யாக்யாநத்தையும், உத்யாநபத்ரிகையில் இக்ஷுச்சாயே என்கிற ச்லோகவ்யாக்யாநத்தையும் பார்க்க. 'பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை' என்பது இங்கே ந்யாயத்தின் மூலம். நாத்தங்காலிலிருந்து பிடுங்கி நட்டதுதான் களமம் என்பது இவர் பேச்சு. தெளிவயலிலுள்ள நெற்பயிருக்கும் அந்தப் பெயருண்டு. தெளிவயலில்தான் அதிகமாகக் களைகள் மண்டும். 'களமே' என்ற ஸப்தமிக்கு 'நிமித்தம்' என்று பொருள் சொல்லலாம். அதிகரணார்த்தம் கொண்டால் 'பயிருள்ள வயலில்' என்பது லாக்ஷணிகப் பொருள். பயிரில் களை முளைக்காது; பயிர்கள் நடுவில் வயலில்தான் முளைக்கும். இதையும் மனுச்லோகத்தை உதாஹரித்துக் காட்டியுள்ளோம். பதவுரை நாம் இங்கே எழுதவில்லை. 'பயிர்வயல்' என்பதில் 'பயிர்' என்பது ஹேதுகர்பவிசேஷணம்.

ப. 26. தயா- ச. 26. "[illegible]'- 1930-வருஷத்தில் அச்சிட்ட ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்தைப் பார்க்க. '[illegible]', [illegible] என்று அங்குள்ளதைக் கவனிக்க. குழந்தைகாள்! நீங்கள் எதை அறிந்தீர்கள். நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள்.

ப. 29- 30- 31- 32. இதை ஆராய்வதற்கு இந்த ஸ்ரீரங்கத்தம் [illegible] இல்லையா என்று கேள்வி. ஆராய்ச்சியைத் தெரி[illegible] வாருங்கள். [illegible]



பாசுரத்திற்கு நாம் உரைத்த பொருள்களின் ரஸத்தில் அணை பரவசமாக ஈடுபட்டுப் புகழ்ந்ததை இவர்கள் தலைகீழே நின்றாலும் மறுக்கமுடியாது. அவர் பங்க்திகளைப் பார்க்க. அதை அப்படியே எழுதி அதற்குத் தடஸ்தராகப் பொருளுரைக்க எம் பதிலுரைகளுக்குமேல் இவர்கள் ஏதாவது சொன்னாலல்லவோ நாம் பதில் சொல்லவேணும். ச்ருதப்ரகாசிகையில் படிக்கட்டு என்கிற சங்கைக்கே இடமில்லை என்று நிரூபித்துளோம்.

ப. 32. '[illegible]' பாஷ்யத்திற்கு ஸரியான பொருளை நிரூபித்துளோம். உத்தரசதகம் 23-ம் ச்லோகத்தைக் கவனித்தால் நாமுரைத்த பொருள்தான் ஸரியென்று விளங்கும். '[illegible]'- "[illegible]'- ஆநந்தஸ்வரூபஸ்வபாவங்கள் ஸாக்ஷாத்தாக வரமாட்டா. ஆறு குணங்களிலிருந்து மற்ற தயாதி குணங்கள். ஆறு குணங்கள் எதிலிருந்து துக்கித்வம் என்னும் தயை வரும். தயை இச்சை என்றால், ஜ்ஞாநத்திலிருந்து வரும். ஜ்ஞாநம் துக்கத்திற்குக் காரணமாகாது; அஜ்ஞாநம் துக்கஹேதுவாகும். தமஸ் அல்லவோ துக்கத்திற்கு மூலம். "[illegible]' என்று ஸ்ருஷ்டி இச்சாமூலமென்றதால், '[illegible]' என்றதைக்கொண்டு இவர்கள் சொல்லும் அழுகை மூலமல்ல என்பது ஸ்பஷ்டம். "[illegible]" என்பதையும் கவனிக்க.

ப. 35. '[illegible]'- இங்கே பாடம் அசுத்தமென்று அண்ணா பேசவில்லை. இதைக் காட்டிலும் ஸ்வாரஸ்யபாடம் சொல்லலாமென்று பேசுகிறார். பிம்பத்தின் பேச்சு இந்த நிழல்களுக்குப் புரியவில்லை. இருக்கிற பாடத்தை மாற்ற ந்யாயமில்லை என்று நிரூபித்தோம். அதே ச்லோகத்தில் ப்ரக்ரமவைரூப்யம் வருமென்று காட்டினோம். '[illegible]' என்றவிடத்தில் பெருமான் முதல் குருவென்பது முதுமையால் சொன்னதேயொழிய, உடையவர் தான் நாயகமணியென்றும் [illegible] பெருமானுக்குச் சேனையென்றும் ஸ்பஷ்டமாக உரைக்கப்பட்டுளது. [illegible]க்தாகலாபத்தில் 'நாயகமணி' என்றவிடத்தில்நாயகனை பெருமாள்குருபங்க்தியில் நாயகமணி[illegible]

நவர்தான் எக்காலத்திலும் நாயகமணி. கல்பமென்பது அந கல்பமாவதை பாஷையே ஸஹியாது; கல்பமே இளப்பமாய் விட்டால் கல்பமாவதில் என்ன பயன்? கல்பமானதும் இளப் பம்தானே வந்துவிடும். கல்பத்தை அநுகல்பமாக வர்ணித்திருப் பதை ஸம்ஸ்க்ருதபாஷையில் நாம் கண்டதில்லை.

ப. 36. 37. நாம் பாவேப்ரயோகம் தானென்று பேசியுள் ளோம். தமிழிலக்கணப்படி பாவேப்ரயோகத்தை எப்படிச் சொல்வதென்று கேட்ட கேள்விக்குப் பதிலில்லை.

ப, 34. 'ந வரேஷு' என்கிற மாகசலோகத்திலுரை யில் அரும்பதத்தில் ஸ்கலநம் வந்ததென்றோம். ஸ்கலனம்தான் என்று தெரிந்திருந்தால், எப்படி ஸ்கலனமென்று கேட்பரோ தெரிந்தவர்.

ப. 38. 'கதவ்யம் ஸகருதேவ'– 1887-ம் வருஷத்திலும் அதற்கு முன்பும் அனேகப்ராசீனமாத்ருகைகளை வித்வான்கள் பார்த்து இந்த சுலோகத்தைப் போட்டிருப்பதற்கு என்ன ஸமா தானம். அந்த ஓலைகளெல்லாம் ப்ரமாணமல்லவோ. ஒரு பதிப்பில் அச்சுப்பிழை யென்று இவர் பேசுவது முழுப் பூஷிணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்ப்பதே. 1908-ல் அண்ணு மாதாமஹ ரான ஜீயர்ஸ்வாமி அனேகமாத்ருகைகளை ஆராய்ந்து பார்த்த சோதித்து அச்சிட்டதிலும் இது இருக்கிறதே. இவர்கள் சட தம் பொய்யாயிற்றே என்று இவர்களுக்கு லஜ்ஜை வேண்டாமோ 'ஸஷ்ய 08' புத்தகத்தில் அந்த ஜீயர் ஸ்வாமியைத் தம்முடை ஆசிரியரென்றும், பாடசோதனத்தில் இதம்பரமாக உழைத் வரென்றும் பேசுகிறார். சிஷ்யர் குருவை அதிக்ரமித்தாரோ அப்பொழுதிருந்த ஓலைக்கோசங்கள் ச்ரத்தேயமா? இப்பொழு புதிதாகக் கொண்டுவருவது ச்ரத்தேயமா? சில ப்ராசீனகோச களிலிருந்தால் போதாதோ? விடக்காரணமும் ஸம்பவமுமுண்டு சேர்க்கக் காரணமும் ஸம்பவமும் அடியோடில்லை. ஸ்ரீலோ தேசிகனே முதலிலெழுதாமல் பின்பு சேர்த்திருக்கலாகாதோ எப்பொழுது க்ரந்தமெழுதியது என்பதற்கு ஏதேனும் ஆதார [illegible] மெழுதிய [illegible] சேர்ப்பதும் திரு


# நல்லெண்ணை.

சுத்தமான காயவைத்த, வெள்ளை எள்ளை ஆட்டி எடுத்த கலப்பில்லாத எண்ணை.

இது தேகத்திற்கும், கண்களுக்கும், ஆரோக்யம் தர தக்க முள்ளது. வடமொழியில் "ஸ்நேஹமென்ற" பெயர் வைத்தது இதற்கே பொருந்தும்.

குழந்தைகளுக்கு கண்களில் சுட்டக்கூடியது.

☞ A. M. சஞ்சீவிராய செட்டியார்,
29, கெங்காதீச்வரர்கோயில் தெரு,
புரசவாக்கம் — சென்னை.

Registered No. M. 3343

# ஸ்ரீ சின்ன காஞ்சீபுரம் வைசாகோத்ஸவத்தில் நடந்த ஸ்ரீரங்கம் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபை.

ஸ்ரீமான் முன் ஹைகோர்ட் ஜட்ஜ் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின் 'ஹஸ்திகிரி' என்னும் திருமாளிகையில் முதல் உத்ஸவம் முதல் பண்டிதர்களின் அரிய உபந்யாஸங்கள் நடந்த பின் ஏழாவது உத்ஸவம் திருத்தேர் திருநாளில் பகல் 3-மணிக்கு ஸ்ரீ.உ.வே. வித்வான் அய்யாறு க்ருஷ்ணமாசாரியார் ஸ்வாமியின் தலைமையில் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணி என்னும் மாத பத்திரிகையின் முன்னேற்றத்தைப்பற்றி தீர்மானம் செய்யப்பட்டது.

## நன்கொடைகள்.

மஹாஸ்துதி வியாக்கியானத்தை அச்சிடுவதற்காக ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. புரசைபாக்கம் தேரெழுந்தூர் T. R. ராஜகோபாலாச்சாரியார்ஸ்வாமி கிருபை கூர்ந்து ரூபாய் 25—0—0 உபகரித்திருக்கிறார். தயாசதகம் வியாக்கியானத்தை அச்சிடுவதற்காக ஸ்ரீ.உ.வே. சித்திரகூடம் Professor, K. ராமாநுஜாசாரியார்ஸ்வாமி பொருளுதவி செய்வதாக கிருபையினால் வாக்களித்திருக்கிறார். இந்த ஸ்வாமிகளுக்கு நாம் எல்லோரும் க்ருதக்ஞராய் இருக்கவேண்டியதுடன் இப்படி ஸம்ப்ரதாய விஷயத்தில் உபகரிக்கும் மஹா புருஷர்களுக்கு ஸகல ச்ரேயஸ்ஸுகளும் உண்டாகும்படி பிரார்த்திக்கிறோம். 100-பிரதிகள் அவர்களுக்கு என்று தனியே அச்சிட்டு வருவதை அவர்கள் அநேகருக்கு இனாமாக கொடுப்பதாக திருவுள்ளம்.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Kamalamba Press, Kumbakonam.
Published at Srirangam by A. V. Gopalachariar,